# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 17 வெள்ளிக்கிழமை(03.11.2006) UTHAYAN- Lively National Tamil Daily கதிர் : 338


# கிளிநொச்சி மருத்துவமனைக்கு மிக அருகில் குடியிருப்புகள் மீது விமானக் குண்டு வீச்சு!

## வீடுகள் தரைமட்டம்; ஐவர் உடல் சிதறிப் பலி!! நோயாளர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம்

கிளிநொச்சி, நவம்பர்.03

**கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள மாவட்டப் பொது மருத்துவமனைக்கு அருகில் - சுமார் ஐநூறு மீற்றர் தூரத்தில் - நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் விமானப்படையின் 'கிபிர்' ஜெற் விமானங்கள்குண்டு வீச்சு நடத்தின. குடியிருப்புப் பகுதிகள் மீது ஐந்து தடவைகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட குண்டு வீச்சினால் வீடுகள் பலவும் தரைமட்டமாயின. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உடல் சிதறிப் பலியாகினர்.**

மாவட்ட மருத்துவமனைக்குப் பின்புறமாக வீசப்பட்ட குண்டுகளால் மருத்துவமனைக் கட்டடங்களும் சேதமடைந்ததாக அறியப்படுகின்றது.

தாக்குதல் நடத்தப்பட்டவேளை மாவட்ட மருத்துவமனையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட நோயளர்கள் தங்கி இருந்தனர். மதிய உணவுவேளை என்பதால் படுக்கைகளில் தங்கியிருக்கவில்லை.

இந்த மருத்துவமனை அண்மையிலேயே புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## 650 பயணிகள் கப்பல் மூலம் திருமலையை அடைந்தனர்

கொழும்பு, நவ.3

காங்கேசன்துறையில் இருந்து 650 பயணிகளுடன் நேற்றுமுன்தினம் புறப்பட்ட கடற்படைக் கப்பல் நேற்றுப் பிற்பகல் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்தது என்று கடற்படைப் பேச்சாளர்


(8ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் ஷெல் வீச்சு படைச் சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, நவ.03

முகமாலையிலுள்ள இராணுவ முன்னரங்க நிலைகள் மீது நேற்று அதிகாலை 1.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)



குண்டுவீச்சில் உயிரிழந்த அப்பாவிகள்



தரைமட்டமான குடியிருப்பு

## மீண்டும் அரச பயங்கரவாதம் இளந்திரையன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, நவ.03

கிளிநொச்சி மருத்துவமனை அருகே விமானப்படையினர் வான்குண்டுத் தாக்குதலை நடத்தியமை அரசின் பயங்கரவாத நடவடிக்கை என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் சாடியுள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பாக 'ரொய்ட்டர்ஸ்' செய்தி நிறுவனத்துக்கு இளந்திரையன் அளித்த நேர்காணலில் கூறியுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா விமானப்படையின் வான் குண்டுத் தாக்குதலில் ஒரு வீடு நிர்மூலமானது.


(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பயிற்சி முகாம் மீதே தாக்குதல் என்கிறது இராணுவம்

கொழும்பு, நவ.03

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் மீதே விமானப்படையினர் தாக்குதல் நடத்தினர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்திருக்கிறார். இந்தத் தாக்குதல் தொடர்பாக நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு அவர் வழங்கிய செவ்வியில் தெரிவித்திருப்பதாவது:-

விமானப்படையினர் இன்று (நேற்று) இரு இடங்களில் வான் தாக்குதல் நடத்தினர். மன்னாருக்கு வடக்கே கடற்புலிகளின் தளம் மீது இன்று காலை தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் மதியம் 2 மணியளவில் கிளிநொச்சியின் தென்கிழக்கே உள்ள ஒரு விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. (8ஆம் பக்கம் பார்க்க)



சேதமடைந்த மருத்துவமனைக் கூரை



மருத்துவமனையிலிருந்து வெளியேற்றம்...

## குடாநாட்டுக்கு ஐ.நா கொடியுடன் அரசாங்கத்தின் உணவுக் கப்பல்கள்

### அனுமதி கிடைத்துவிட்டது என்கிறார் அமைச்சர்

கொழும்பு, நவம்பர் 03

யாழ். குடாநாட்டுக்குத் தேவையான பொருள்களை ஐக்கிய நாடுகள் சபையின் கொடியுடன் கப்பல்களில் எடுத்துச் செல்ல அரசு முடிவுசெய்திருக்கின்றது.

அத்தியாவசிய உணவுக் கப்பல்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கொடியைப் பறக்கவிட ஐக்கிய நாடுகள் சபை அனுமதி வழங்கியுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின்னர் யாழ். குடாநாடு வெளித்தொடர்புகள் இன்றித் துண்டிக்கப்பட்டிருக்கிறது. அங்கு அத்தியாவசியப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களுக்குமே பெரும்

(8ஆம் பக்கம் பார்க்க)



சம்பவ இடத்தில் கண்காணிப்புக் குழு பிரதிநிதி

## விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடன் நீக்கவேண்டும்

### இந்திய சமாதானசபை விடுக்கும் வேண்டுகோள் இது

கொழும்பு, நவ.3

இந்திய அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையை உடனடியாக நீக்க வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது இந்திய சமாதான சபை.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படுவதானது இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக்காண உந்துதலாக அமையும் என்றும் மேற்படி சபை தெரிவித்துள்ளது.

மூத்த ஊடகவியலாளர் குல்டிப் நாயர், தொழிற் சங்கத் சட்டத்தரணி காயத்திரி சிவ், சமாதான நடவடிக்கையாளர்களான ஹநாஆகா, ஜயஸ்ரீதயங்கர் மற்றும் சுதந்திர ஊடகவியலாளர் யாதிதேசாய் ஆகியோர் அடங்கிய இந்திய சமாதான சபை குழு ஒன்று கடந்த 29 ஆம் திகதி இலங்கைக்கு வந்து பல்வேறு பிரதேசங்களுக்கும் விஜயம் செய்ததுடன் பல்வேறு தரப்பினருடன் பேச்சுக்களையும் நடத்தியிருந்தது.

மேற்படி தமது விஜயம் குறித்து இந்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியை இப்போதைக்கு திறக்க முடியாது என்கிறார் அமைச்சர்

கொழும்பு,நவ.3

இப்போதைக்கு ஏ-9 வீதியை திறக்க முடியாது. முகமாலை முன்னரங்க இராணுவ நிலைகள் மீது புலிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான ஏ-9 வீதியைத் திறக்க முடியாதுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மக்களை உலுக்கிய வதந்தி!

யாழ்ப்பாணம், நவ.3

குடாநாட்டு மக்களை நேற்று பெரிய உலுப்பு உலுப்பி விட்டது அந்த வதந்தி.

என்ன, ஏ-9 பாதை திறந்தாச்சாம், உண்மையே?

எல்லோரும் கதைக்கிறார்கள், ஏ-9பாதையைத் திறந்தாச்சாம், அது உண்மையா?

வழியில் கண்டவர்கள் நேற்று ஒருவரை மற்றவர் கேட்டுக்கொண்ட கேள்விகள்மேற்கண்ட வகையில் அமைந்திருந்தன.

அலுவலகங்களில் பணியாற்றியவர்கள், இது குறித்துத் தகவல் தெரிந்திருக்கக் கூடியவர்கள் என்று தாம் இனங்கண்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# இரு பிரதான கட்சிகளும் இணைந்த பிறகும் தீர்வு இல்லையேல் அது புலிகளுக்கே வாய்ப்பு

## இப்படிக் கூறுகின்றார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, நவ. 03

"தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்த பிறகும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லையென்றால் அந்த இணக்கப்பாட்டால் அர்த்தமில்லாமல் போய்விடும். புலிகளும் இதைக் காரணம் காட்டி நாட்டைப் பிரித்துத தமிழீழத்தை அமைத்து விடுவார்கள்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கொஸ்கமவில் உள்ள பௌத்த விகாரையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"தேசியப் பிரச்சினைக்கு ஒருபோதும் யுத்தத்தால் தீர்வு காண முடியாது. அப்படிக் காண முடியுமென்றால் எப்போதோ தீர்வு கண்டிருக்கலாம். இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைத் தவிர வேறு மார்க்கமில்லை என்பதை அனைவரும் விளங்கியாக வேண்டும்.

நாடு பிரியாதவாறு - நாட்டில் உள்ள மூவினங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வாறு - நிலையான அரசியல் தீர்வு ஒன்று இனப்பிரச்சினைக்கு அவசியம்.

அதற்கான தீர்வை எட்டு முகமாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இணக்கப்பாடொன்று எட்டப்பட்டது. நாட்டில பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பம் மாத்திரமன்றி இறுதிச் சந்தர்ப்பமும் கூட.

இதன் முக்கியத்துவத்தை இரு பிரதான கட்சிகளும் உணர்ந்தமை மட்டும் போதாது. இந்நாட்டு மக்கள் அனைவரும் உணர வேண்டும். முழு ஆதரவைத் தர வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நன்மை கருதியோ அல்லது அரசியல் இ[]பம் கருதியோ நான் இந்த இரு கட்சிகளின் இணக்கப்பாட்டுக்கு உடன்படவில்லை. நாட்டின் நலன் கருதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் நிரந்தர அமைதி நிலவ வேண்டும் - அதற்கான அரசியல் தீர்வு ஒன்று பெறப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் இரு கட்சிகளின் இணக்கப்பாட்டுக்கு நான் உடன்பட்டேன்.

தெற்கில் இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தேசியப் பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் அது பற்றிப் பேசத் தாம் தயார் என தமிழீழ விடுதலைப் புலிகள் ஜெனிவாப் பேச்சின்போது தெரிவித்துள்ளனர்.

இதுவொரு நல்ல சந்தர்ப்பமாகும். நாட்டின் நலனுக்காக - இந்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக - இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்தி யாக வேண்டும்.

இரு பிரதான கட்சிகளும் இணக் கப்பாட்டுக்கு வந்த பிறகும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படாமல் போனால், அது புலிகளுக்குச் சாதக மாக அமையும். இதைக் காரணமாகக் கொண்டு புலிகள் நாட்டைப் பிரித்துத் தமிழீழத்தை அமைத்து விடுவர். இந்நிலை ஏற்படாதிருக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." - இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க கூறினார். (ஐ)

# யாழ். சரவணைச் சந்தியில் நேற்றுக்காலை மனிதத் தலை

யாழ்ப்பாணம், நவ.03

வேலணையில்,சரவணைச் சந்தியில் நேற்றுக் காலை மனிதத் தலை ஒன்று காணப்பட்டது. இதனால், அங்கு பெரும் பீதியும், பரபரப்பும் ஏற்பட்டது.

மனிதத் தலை காணப்பட்ட இடத்திலிருந்து சுமார் அறுநூறு மீற்றர் தொலைவில் - எட்டாம் கட்டை என்னும் இடத்தில் தலைக்குரிய முண்டம் கிடக்கக் காணப்பட்டது.

இவ்வாறு தலை வெட்டிக் கொல்லப்பட்டவர் யாழ்ப்பாணம், கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் தயாபரன் (வயது-39) என்ற குடும்பஸ்தர் என அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

தலையையும், முண்டத்தையும் நேற்றுக் காலை மீட்டெடுத்த பொலிஸார் அவற்றை எடுத்து வந்து யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

கோப்பாயில் உள்ள தனது வீட்டிலிருந்து யாழ். நகரப் பகுதிக்குச் சென்றிருந்த இவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று இவரது துணைவியார் தெரிவித்தார்.

இவர் எவ்வாறு சரவணைப் பகுதிக்குச் சென்றார் என்பது தெரியவில்லை என்றும் கூறினார்.

கொலையுண்ட நபர் சுமார் 15 ஆயிரம் ரூபா பணத்தைத் தன்னோடு எடுத்துச் சென்றிருந்தார் என்றும் அப்பணம் அபகரிக்கப்பட்டிருக்கிறது எனவும் கூறப்படுகிறது.

சரவணைப் பகுதியிலுள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் இவர் கடைசியாகக் காணப்பட்டார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. துண்டிக்கப்பட்ட இவரது தலையின் அருகே தேசிய அடையாள அட்டை மட்டும் காணப்பட்டது.

இவரது முண்டத்தில் கூரிய ஆயுதத்தால் - குத்தப்பட்ட அடையாளங்களும் காணப்பட்டன. கொடூரமான முறையில் இடம் பெற்றிருக்கும் இக்கொலைச் சம்பவம் வேலணைப் பகுதியில் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-203)

## ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளைஞரை பொறுப்பேற்குமாறு பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.3

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் 8 ஆம் திகதி பெயர், முகவரி எதுவும் தெரியாத நிலையில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் வீதியில் சுகவீனமுற்ற நிலையில் இருந்தார் என்று கூறி வீதியால் சென்ற ஒருவரால் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் -

இவர் மனநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் இதுவரை எவராலும் பெறுப்பேற்காத நிலையில் இருக்கிறார் என்றும்-

எனவேஇவரது உறவினர்கள் யாராவது இவரை உடன் அடையாளம் காட்டி பெறுப்பேற்குமாறும் - யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## கலாசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பித்தோர் கவனத்துக்கு!

கொழும்பு, நவ.3

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அதிபர், உப அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம் அனுப்பியவர்களை தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கோரப்பட்ட விளம்பரத்திற்கு ஏற்ப விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் இன்னமும் கொழும்பு அலுவலகத்தை வந்தடையவில்லை என்றும்-

விண்ணப்பித்தவர்களை உடன் கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளுடன் அல்லது யாழ். வலயக் கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பித்தவர் தமது விண்ணப்பங்களை 011 2785803 என்ற தொலைநகல் (பக்ஸ்) இலக்கத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (1)

## யாழ்.ஆஸ்பத்திரியுடன் தொடர்பு கொள்ள 5 தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.ஆஸ்பத்திரியுடன் தொடர்பு கொள்ள ஐந்து தொலைபேசி இலக்கங்களை நிர்வாகம் அறிவித்துள்ளது.

நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்காக தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது என்றும்-

222 2261, 222 3348, 222 2301, 222 2302, 222 2303 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் பொதுமக்கள் தொடர்பு கொள்ள முடியும் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (1)

## நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள

# புலமைப் பரிசில் பரீட்சைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

கொழும்பு, நவ.3

வடக்கு-கிழக்கில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூ[]த்தியடைந்துள்ளன என்று பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைகள் பரீட்சைக்கிளை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 84 நிலையங்களிலும்- திருகோணமலையில் 5 நிலையங்களிலும் - கிளிநொச்சியில் 5 நிலையங்களிலும் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

சம்பூரில் ஏற்பட்ட மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மாணவர்களுக்காக, வாகரை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் 5 நிலையங்களில் பரீட்சைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு ஆகிய வலயக்கல்விப் பணிப்பாளர்களின் கண்காணிப்பில் பரீட்சைகள் நடைபெறவுள்ளது.

சுட்டெண் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் அது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை- தீவுப்பகுதி பரீட்சை நிலையங்களுக்கான வினாத்தாள்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன என்று யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (203)

## கல்வியாளர்களின் கணனி அறிவு கணிப்பீடு யாழ்., வன்னியில் நேற்று இடம்பெறவில்லை

### உரிய படிவம் வந்து சேராததால் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், நவ.3

இலங்கை முழுவதும் கணனிக் கல்வி சார்பு கல்வியாளர்களின் கணனி அறிவு தொடர்பாக நேற்று இடம்பெற்ற கணிப்பீடு யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் இடம்பெறவில்லை.

கணனி அறிவுள்ள ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களின் விவரங்களைச் சேகரிப்பதற்காக கணக்கெடுப்பு ஒன்று நேற்று நடத்தப்பட்டது. இதற்காக பாடசாலைகள் நேற்று முற்பகல் 11 மணிக்கு மூடப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்கும் இந்தப் படிவங்கள் கிடைக்காததால், பாடசாலைகள் முற்பகல் 11 மணிக்கு மூடப்படவில்லை என்றும் -

குறிப்பிட்ட படிவங்கள் நிரப்பப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)

## குழந்தைகளுக்கு இன்றுமுதல் பால் மா விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.03

யாழ்.மாவட்டத்தில் உள்ள தாய் சேய் சிகிச்சை நிலையங்கள் ஊடாக சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் இன்று முதல் குழந்தைகளுக்கான பால் மா விநியோகம் செய்யப்படவுள்ளது என்று பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஒன்று முதல் 3 வயது வரையான பிள்ளைகளுக்கு அங்கர் 1+ உம்-

3 தொடக்கம் 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு அங்கர் 3+ உம் வழங்கப்படவுள்ளது.

தாய் மார்கள் உரிய தாய்சேய் சிகிச்சை நிலையங் கள் மூலம் இவற்றினைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (203)


### திருமண நாள் ஒத்திவைப்பு

இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில்

சிரஞ்சீவி கலாதரன் அவர்களுக்கும் சௌபாக்கியவதி ரேணுகா அவர்களுக்கும்

நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நடைபெறும் காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

நா.ஹரீந்திரக்குருக்கள்
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(54911)



### பிள்ளைகளுடன் வாருங்கள் பிரச்சினைகளைத் தீருங்கள்

சிறுவர் கண்காட்சி - 2006

நாளை தொடக்கம் திங்கள் வரை

ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள "சிறுவர் மகிழ்வகத்தில்"

வாருங்கள் பாருங்கள் கூறுங்கள்

ஏற்பாடு : விழி உள சமூக அமையம். அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன்

அனுசரணை: சிறுவர் மகிழ்வகம்

(54913)



PERSONAL CLASSES
364, Stanly Rd. Jaffna.

G.A.Q., BA-I, Final

யாழ்ப்பாணம் - பேராதனை

G.A.Q - 2006

Revision and Paper

தமிழ் - திரு.தர்மராஜா

ENGLISH : Mr.MAHESWARAN


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகநாதன் ஞானாம்பாள்

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் ஞானாம்பாள் நேற்று (02.11.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னட்டி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதி-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகநாதனின் (இ.போ.ச சாரதி, கோண்டாவில்) அன்பு மனைவியும் சுஜீதரன், சஞ்சீவன், சிந்துஜன், துவாரகா (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பகீரதன் (மாணவன், கைதடி விக்கினேஸ்வராக் கல்லூரி), துஸ்யந்தி (மாணவி , சுண்டுக்குழி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் நவரட்ணம் (ஆஸ்திரேலியா), தவமலர், சிவபாக்கியம், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் அடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஜரின் முருகமூர்த்தி.

### சதாசிவம் தயாபரன்

வளலாயைப் பிறப்பிடமாகவும் கோப்பாயைப் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தயாபரன் (01.11.2006) புதன்கிழமை இரவு அகால மரணமானார்

அன்னார் சதாசிவம் - தவமணிதேவி தம்பதியரின் சிரேஸ்ர புதல்வனும் கவிதாவின் அன்புக் கணவரும், திருஞானசம்பந்தர் - பத்மாதேவி தம்பதியரின் மருமகனும் பானுஷாவின் தந்தையும் பகீரதி, பிரபாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிமுலானை லேன்,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (54916)

தகவல்:
மனைவி, பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் நேர்மையற்ற போக்கு ஜெனீவா பேச்சில் அம்பலம்

## தாயகம் திரும்பிய தமிழ்ச்செல்வன் [illegible]ரிவிப்பு

கிளிநொச்சி,நவ.3

அரசின் நேர்மையற்ற - உண்மையற்ற போக்கு தெட்டத் தெளிவாக தற்போது அம்பலமாகியுள்ளது என்று தாயம் திரும்பியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் இருந்து நேற்றுமுன்தினம் தயாகம் திரும்பிய அரசில்துறைப் பொறுப்பாளர், இங்கு ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் இவ்விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:-

நாம் இம்முறை ஜெனீவா சென்றதை ஒரு வெற்றிகரமான நிகழ்வாகத்தான் பார்க்கிறோம். ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் பேச்சுக்கு விரோதமானவர்கள் - பேச்சுக்கு வர மறுக்கிறார்கள் - விடுதலைப் புலிகள்தான் யுத்தத்தைத் திணிக்கிறார்கள் என்று பாரிய அளவில் சர்வதேச அரங்கில் பிரசாரம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பழிசுமத்த முற்பட்டனர். ஆனால் இப்போது அரசின் நேர்மையற்ற - உண்மையற்ற போக்கு தெட்டத் தெளிவாகியிருக்கிறது.

இம்முறை பேச்சுகள் நிறைவடைந்த பின்னர் சர்வதேச ஊடகவியலாளர்கள் முன்னிலையில் நோர்வே அனுசரணையாளர்களே மிகத் தெளிவாக, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள சரத்தான ஏ-9 பாதையைத் திறக்க அரசு மறுத்துவிட்டதும் இந்தப் பேச்சுக்கள் வெற்றியடையாமைக்கு ஒரு காரணம் என்று பகிரங்கமாக கூறினர். இதன்மூலம் எமது தரப்பின் மீது சர்வதேச சமூகம் இனி அழுத்தங்கள் - குற்றச்சாட்டுகளை சுமத்த முடியாது. இருநாள் பேச்சுகளிலும் சிறிலங்கா அரசின் கோரமுகம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெனீவாப் பேச்சுக்கு செல்லும் முன்பாகவே நாம் இந்தப் பேச்சுவார்த்தையில் எமக்கு துளிகூட நம்பிக்கை இல்லை என்று தெரிவித்திருந்தோம். சர்வதேச சமூகத்தின் அழைப்பை ஏற்றுத்தான் செல்கின்றோம் என்றும் கூறியிருந்தோம். கிளிநொச்சியிலிருந்து மனிதாபிமானப் 'பிரச்சினைகளை பேசுவதை விட சர்வதேச அரங்கத்திலே நின்று எமது மக்களினது மனித அவலங்களை எடுத்துக் கூறுமாறு சர்வதேச சமூகம் கேட்டுக் கொண்டது. அதனை ஏற்று சர்வதேச அரங்கத்தில் நின்று எமது மக்களினது மனித அவலங்கள் பற்றியும், அரசின் பயங்கரவாதங்கள், படுகொலைகள், ஆட்கடத்தல்கள், எமது மக்கள் மதான பொருளாதாரத் தடைகள் ஆகிய விடயங்களை தெளிவாக முன்வைத்துள்ளோம். இந்த விடயங்கள் சர்வதேச சமூகத்தினது கவனத்தை தொட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

ஜெனீவாவில் இரண்டு நாள்கள் நடைபெற்ற பேச்சுக்களின் முடிவில் சர்வதேச சமூகமானது ஆச்சரியமும் வியப்பும் கவலையுமடைந்திருக்கிறது. இரண்டு நாள்கள் நடைபெற்ற பேச்சுக்களில் பல முன்னேற்றங்கள் ஏற்பட வாய்ப்பிருந்தும் ஏ-9 பாதையை திறக்க மறுத்து அரசாங்கக் குழு பிடிவாதமாக இருந்த காரணத்தால் பேச்சுக்களில் முன்னேற்றங்களைக் காணமுடியவில்லை.

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 6 லட்சம் மக்களுக்கான ஒரே ஒரு தரைவழிப்பாதையான ஏ-9 பாதை திறப்பின் அவசியத்தை சர்வதேச சமூகம் வலியுறுத்துகிறது என்று தான் நான் நினைக்கின்றேன். ஏ-9 பாதை திறப்பு என்பது மனிதாபிமான பிரச்சினை. அதனை இராணுவ விவகாரமாக்குவதை சர்வதேச சமூகம் விரும்பவில்லை. கொழும்பில் நாம் திரும்பி வருகின்றபோது இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களை நாம் சந்தித்து ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுகள் தொடர்பாகவும் எமது நிலைப்பாடுகள் தொடர்பாகவும் விவரித்துள்ளோம். ஏ-9 பாதை தொடர்பில் இராணுவ விவகாரமாக்குவதை விரும்பவில்லை என்பதாகத்தான் அவர்களின் கருத்தும் இருந்தது.

### உள்நோக்கம் இருக்கிறது

ஏ-9 பாதை திறப்பு என்பது ஒரு மிகச் சிறிய விடயம். ஆனால் இதனை இலங்கை அரசு மறுத்து பெரிய விவகாரமாக்கி இருப்பதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது எனறு ஜெனீவாவில் சர்வதேச ஊடகவியலாளர்கள் முன்னிலையில் நாம் தெரிவித்திருந்தோம்.

ஒரு பாரிய இராணுவ நடவடிக்கைக்காகத்தான் இப்படியான செயற்பாடுகளை காட்டியிருப்பதாக நாம் பகிரங்கமாக சர்வதேச சமூகத்துக்கு தெரிவித்திருக்கிறோம்.

ஏ-9 பாதை தொடர்பாக அரசு உத்தரவாதங்களைக் கோருவதும் நிபந்தனைகளை விதிப்பதும் போலியானது. ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே ஏ-9 பாதைய்ய திறக்க மறுக்கின்றனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்த ஏ-9 பாதையை மூடிவிட்டு பேச்சுக்கு வாருங்கள் என்றனர். எமது மக்களுக்கான ஒரே தரைவழிப் பாதையை திறக்கமறுத்துவிட்ட நிலையில் - நோர்வேக்கு நாம் செல்ல இருந்த பயணத்தை இரத்துச் செய்துவிட்டோம். எமக்கு அத்தகைய பயணத்தில் மகிழ்ச்சியும் திருப்தி யும் இல்லை. எமது தலைமைப்பீடம் உடனே வருமாறு அழைத்ததற்கு இணங்க நாம் பேச்சுகள் முடிந்த உடனே தாயகம் திரும்பியுள்ளோம்.

இனி அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக நோர்வே, இணைத் தலைமை நாடுகள் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பர். நாமும் எமது தேசியத் தலைவருடன் கலந்து ஆலோசித்து அடுத்த கட்டத் தீர்மானங்களை மேற்கொள்வோம்.

### நேர்மையற்ற போக்கு அம்பலமாகிவிட்டது

பேச்சு மேசைக்கு வந்த அரச குழுவினருக்கு தமிழ் மக்கள் தொடர்பில் எதுவித அக்கறையுமே இல்லை. சர்வதேச சமூகத்தினது உதவி ஏதேனையும் சுரண்டிக் கொண்டு போகலாம் என்பதாகத்தான் இருந்தனர். ஆனால் அவர்களது நேர்மையற்ற போக்கு இம்முறை அம்பலமாகி விட்டது. பேச்சுகள் முடிந்த பின்னரும் ஊடகவியலாளர்கள் மாநாட்டிலும் இராஜதந்திரிகளை சந்திக்கின்ற போதும் இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டோம். இனிவரும் காலங்களில் சிறிலங்கா அரசாங்கத்துக்கான அழுத்தங்களே அதிகரிக்கும் என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

நாங்கள் பேச்சுக்கு போக மறுத்திருந்தால் எங்கள் மீதே முழுப் பழியை சுமத்தியிருப்பர். பேச்சுக்கு சென்றபடியால் அரசின் கொடூரமான யுத்தவெறிப் போக்கு மற்றும் மனிதாபிமானமற்ற படுகொலை என்பவற்றை முழு அளவில் பகிரங்கப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தது. எங்கள் மீது சர்வதேச சமூகம் அழுத்தங்களைச் செலுத்துவதில் இனி நியாயமே இல்லை. பேச்சுகளின் முடிவில் அரசும் இணங்கி வராததால்தான் பேச்சுகள் தோல்வியுடைந்தது என்று சர்வதேச சமூகம் கூறிவிட்டது.

தாக்குதல்களை நிறுத்துவதற்கும் - யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பதற்கும் நாம் தயார் என்று தெரிவித்துள்ளோம். ஆனால் அரசின் வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளின்போது நாம் கை கட்டிக்கொண்டு வேடிக்கை பார்க்க முடியாது. அது சர்வதேச சமூகத்தின் கையில் உள்ளது. புலிகள் பதில் தாக்குதல் நடத்துகின்றபோது புலிகள் மீது சர்வதேச சமூகம் குற்றம் சுமத்தினால் அது அர்த்தமற்றது - என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன்.


## இரத்தம் தேவை

A+ வகையைச் சேர்ந்த இரத்தம் அவசியம் தேவை.
தொடர்பு: C/o கந்தசாமி மோகன்
104/1, பத்திரகாளி கோயில் வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு.

## விற்பனைக்கு

புத்தம் புதிய போட்டோ கொப்பி இயந்திரம் (A4 பிறின்ரிங் ஸ்கானர் இணைந்தது) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : ஐங்கரன் ஸ்ரோர்,
இல. 194, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். T.P.222 8368 (54910)

## தவறிவிட்டது

100/3, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியுடைய கதிரேசு செல்லத்துரை என்பவருடைய தே.அ. அட்டை யாழ். - கொடிகாமம் மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது ப.திருநாவுக்கரசு (பழவியாபாரி) சாவகச்சேரி சந்தையில் ஒப்படைத்துதவவும். (54884)


## மரண அறிவித்தல்கள்

### செல்லையா இராசம்மா



(காளிகோயிலடி, சங்கானை)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசம்மா நேற்று 02.11.2006 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் (உரிமையாளர், தேவி மரக்காலை) மனைவியும் காலஞ்சென்ற கனகர் - நாகம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற நாகமுத்து - சீதேவன் தம்பதியரின் மருமகளும், பாலசிங்கம்(மணியம்), காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தனபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களாகிய வைத்திலிங்கம், சின்னத்துரை, முத்தாச்சி, செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் Dr.நாகநாதர் (London), இராஜகுமாரி (Canada), சீதாதேவி(Canada), கமலாதேவி (London), இராயேஸ்வரி(சங்கானை), ஜெகநாதன் (Australia), விஸ்வநாதன் (London), நிர்மலாதேவி(மானிப்பாய்), சிவனேசன் (London) ஆகியோரின் பாசமிகு தாயும் Dr.இந்திரா(London), காலஞ்சென்ற அருணகிரி, முத்துக்குமாரசாமி(Canada), ஜெயச்சந்திரன்(London), இராயேஸ்வரன்(Colombo), காவேரி (London), Dr.நந்தினி(Australia), அமிர்தலிங்கம் (மானிப்பாய்), பிரபாநிதி(London) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

*கனகசபை வீதி,*
*மானிப்பாய்.*
*T.P.: 021 4591603*

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

### வைத்திலிங்கம் சுந்தரலிங்கம்



(கிரான்ட்பாஸ் வர்த்தகர்)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கிரான்ட் பாஸ், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலீங்கம் சுந்தரலிங்கம் 01.11.2006 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னரியம் தம்பதியரின் மகனும் காலம்சென்றவர்களான சிவசம்பு - வள்ளிப்பிள்ளை தம்பயரின் மருமகனும் கங்காதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுதர்சினியின் தந்தையும் சிவலிங்கம், சிவகாமசுந்தரி, சிவகலை ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருஞானசம்பந்தர், வைகுந்தவாசன், ஞானதேவி, இராசகுமாரி, சுந்தரமூர்த்தி, திருவாதிரை, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 02.11.2006 கொழும்பில் பி.ப. 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

தகவல்:
வைகுந்தவாசன்
(ஸ்ரீ - மைத்துனர்)
*இல. 09, கைலாச பிள்ளையார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*இல.427 கிரான்பாஸ் வீதி, கொழும்பு-14*
*T.P.: 382507*
(54906)


## இடமாற்றம்

இல.213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவந்த யுனிவெக் நிறுவனம் தற்போது 594/6, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகின்றது. மாணவர்கள் 16.11.2006 ஆம் திகதி முதல் சமுகமளிக்கவும்.

*(54908)* இயக்குநர்.

## G.A.Q 2007 யாழ்.பல்கலைக்கழகம்

(வெளிவாரி)

ஆங்கிலம் { இலக்கியம் / மொழியியல்

புதிய பிரிவு ஆரம்பம் 04.11.2006 (8 மணி)
ஆசிரியர் : சோ.பத்மநாதன்
புதிய உயர் கல்லூரி ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம். (54858)

## A/L 2008, 07 & DAY

B.st. - Mr.பசில்
Acc.- Mr.தவா
Eco.- Mr.கஜீதரன்
C/ma.-Mr.ஜெயக்குமார்
Phy.-Mr.வர்ணன்
Che.-Mr.ஜெயந்தன்
* Tamil-Mr.சிவா
* Sinhala-Mr.றஞ்சன்

SHAMROCK
J/ஈச்சமோட்டை


## சபிண்டீகரண அழைப்பு



கடந்த 19.09.2006 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு

அமரர்

### யோகராசா தமிழ்ச்செல்வன்

(பெரியதம்பி)

அவர்களின் சபிண்டீகரண ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று(03.11.2006) வெள்ளிக் கிழமை நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

*சந்நிதி வீதி,*
*அச்சுவேலி.*
(54897)
குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இரத்தினகோபால் சிவராசா

அன்னை மடியில் 04-11-1955 ஆண்டவன் அடியில் 03-11-2003

*'உள்ளத்தில் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உளன்'*

எங்களின் அருமைத் தெய்வம் சிவபதம் அடைந்து ஆண்டுகள் மூன்றாகி விட்டது. ஆனால் இதயக்குமுறல் ஆறவில்லை அன்னாரின் கனவை நனவாக்க நாம்திட சங்கற்பம் பூண்டுள்ளோம்.

மனைவி, பிள்ளைகள்.
க.மோகனச்செல்வன்
(குமரன் - மைத்துனர்)
*[illegible], ஈச்சமோட்டை, விதானையார் வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*


VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA
UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING
UCSC
UNIVERSITY ADMISSIONS ACADEMIC YEAR 2006 / 2007

APTITUDE TEST FOR THE SELECTION OF CANDIDATES FOR BACHELOR OF INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY AT THE UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING (UCSC), THE VAVUNIYA CAMPUS OF UNIVERSITY OF JAFFNA AND THE RAJARATA UNIVERSITY OF SRI LANKA

**IMPORTANT ANNOUNCEMENT**

Reference to our advertisement appeared in the Virakesari news paper on 02nd November 2006, and the advertisement that is appearing in page 04 of Uthayan 3rd November 2006 (today) please note that the closing date for application is **14th November 2006.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விய வருடம் ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் (05.11.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.04 மணிமுதல் 10.34 மணி வரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரன்
திருவளர் செல்வன்
**சதீஷன் (சதீஷ்)**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருவளர் செல்வி
**அபிராமி (அபி)**
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழ பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.பா.குபேந்திரன் (குகன்),
திருமதி கு.அனுசியா குடும்பத்தினர்,
74/1, கோவில் வீதி, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திரு.பொ.பிறேமேஸ்வரன்,
திருமதி.பி.மகாலெட்சுமி குடும்பத்தினர்,
சேச் லேன், ஆனைக்கோட்டை,
சகோதரி - பாஸ்கர் ரிஷாந்தி (லண்டன்).

(54789) (இரு வீட்டார் அழைப்பு)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண வைபவம்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விய வருடம் ஐப்பசித் திங்கள் 17ஆம் நாள் இன்று (03.11.2006) வெள்ளிக்கிழமை வளர்பிறை திரயோதசி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுப தினத்தில் முற்பகல் 9 மணிமுதல் 11.30 மணிவரையுள்ள (உள்ளூர்நேரப்படி) தனுசு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**செந்தூரன்**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**ரஜிப்பிரியா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் திருமண வைபவம் இல. 25, சங்கை காடற் அவனியூ சிங்கப்பூரில் அமைந்துள்ள ஸ்ரீ அரசகேசரி சிவன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

திரு.திருமதி சிவகுருநாதன்
'குருஸ்தான்'
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(54808)

திருமதி சி. இராமநாதன்
565, ஷேர் போர்ன் வீதி # 903
ரொறன்ரோ ஒன்ட் m4x1w7
கனடா.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 - 03 - 1951
மறைவு
29 - 10 - 2001

## அமரர் சண்முகராஜா சிறீஸ்கந்தராஜா
### (போட்டோசிறி-குரும்பசிட்டி)

திதி: திரயோதசி 03.11.2006

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எம்துயரம் அப்பா!
கண்களில் நீர் வடிகிறது அப்பா ஆனால் துடைப்பதற்கு
உங்கள் கைகள் தானில்லை அப்பா!
சொல்வதற்குச் செய்திகள் நிறைய இருக்கிறது அப்பா!
கேட்பதற்கு உங்கள் காதுகள்தான் இல்லை அப்பா!
எம் உயிர் உள்ளவரை ஆறாது எம்துயரம்
நீங்காது உங்கள் நினைவுகள்.

போட்டோசிறி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(சி-51236)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

# VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA
## UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING

UCSC

**UNIVERSITY ADMISSIONS ACADEMIC YEAR 2006 / 2007**

**APTITUDE TEST FOR THE SELECTION OF CANDIDATES FOR BACHELOR OF INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY AT THE UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING (UCSC), THE VAVUNIYA CAMPUS OF UNIVERSITY OF JAFFNA AND THE RAJARATA UNIVERSITY OF SRI LANKA**

Applications are hereby invited for the above aptitude test from candidates who possess the minimum University Admission requirements as specified under section 3.2 of the Handbook on "Admission to the Undergraduate Courses of the Universities in Sri Lanka Academic Year 2006/2007" issued by the University Grants Commission.

Students who submit applications to the University Grants Commission to be considered for admission to the above programme are required in addition, to submit an application to sit the aptitude test mentioned herein. A pass in the aptitude test is a compulsory prerequisite for being eligible to be considered for admission to the above progarmme.

## ELIGIBILITY FOR THE APTITUDE TEST

A candidate should have fullfilled the three (03) additional requirements listed in section 8.4.6 of UGC Hand Book 2006/2007 (Page 28).

## PROCEDURE FOR APPLICATIONS

1. Applicants are required to prepare their own application forms on A4 size paper **in English** in accordance with the format given below

   OR

   Download the specimen application form from the UCSC Website **http:// www.ucsc.cmb.ac.lk**
   **Hand written applications are not accepted under any circumstances.**

2. The Aptitude test fee of Rs.250/= can be paid to any branch of the People's Bank by using People's Bank normal cash paying-in-slip drawn in favour of the University of Colombo School of Computing People's Bank Account No:086-1001-211-90316 (Thimbirigasyaya Branch).Please note that the applicants copy of the cash paying-in-slip has to be sent along with the application form whilst retaining a photocopy for applicants' records . **Cheques / Money orders will not be accepted.**

3. Certified copies of the G.C.E. Advanced Level, G.C.E. Ordinary Level Certificates and the National Identity Card /Postal Identity Card should be sent along with the duly filled application form. (Certificates should be certified by the Head of School or a Justice of Peace.) The Official Stamp of the Certifying Officer should be placed on certified copies. **Original certificates should not be sent.**

4. Candidates are required to send a Self Addressed (un-stamped) Envelope of 9" x 12" size along with the application form. This envelope will be used to post the admission card for the Aptitude Test to the applicant.

Note: (I) If any difference exists in the name indicated in the application and that in the certificates, an affidavit should be submitted to confirm that they relate to one and the same person.
(ii) The date of the Aptitude Test would be informed to individual applicants who have satisfied the admission requirements for the Aptitude Test.
(iii) Applications will be rejected if:
(a) applicant does **not possess the minimum admission requirements for the Aptitude Test**
(b) application is **not accompanied by a bank cash paying-in-slip**
(c) **application is not received by the closing date**

## SUBMISSION OF APPLICATIONS

Applications can be sent only under registered cover to reach the

- **Senior Assistant Registrar Examinations and Student Services, Vavuniya Campus,University of Jaffna, Park Road, Vavuniya** OR
- **Senior Assistant Registrar Examination University of Jaffna, P.O.Box 57, Thirunelvely, Jaffna** OR
- **Senior Assistant Registrar Examination and Registration UCSC, No.35, Read Avenue, Colombo - 07**

Tentative date of Aptitude test 10th December 2006

**Please indicate on the top left hand corner of the envelope the title "BICT - Aptitude Test 2006/2007"**

Senior Assistant Registrar
Vavuniya Campus of the University of Jaffna

31st October 2006

**SPECIMEN APPLICATION FORM**

For office use only

**UNIVERSITY ADMISSIONS ACADEMIC YEAR 2006 / 2007
APTITUDE TEST FOR THE SELECTION OF CANDIDATES FOR BACHELOR OF INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY AT THE UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING (UCSC), THE VAVUNIYA CAMPUS OF UNIVERSITY OF JAFFNA AND THE RAJARATA UNIVERSITY OF SRI LANKA**

1. Surname with Initials in block letters

(leave one blank cage between surname and initials and between initials)

2. Full Name in block letter.

(leave one blank cage between names)

3. Permanent Address in block letters

(leave one blank cage between different segments of the address)

4. Results of G.C.E. (A/L) Examination 2006

Index No. District
Z Score Contact Telephone No.

Subjects offered & Grades (indicate grade in cage appearing against the respective subject)

| | | | |
|---|---|---|---|
| Higher Mathematics | | Mathematics/Combined Mathematics | |
| Physics | | Chemistry | |
| Accounting | | Business Statistics | |
| Economics | | Business Studies | |
| Biology | | Geography | |
| Logic & Scientific Method | | Latin | |
| Sanskrit | | Music (Oriental, Carnatic, Western) | |

5. G.C.E. (O/L) Examination

| | | Grade | Year |
|---|---|---|---|
| Results for | Mathematics | | |
| | English | | |

6. Courses of Study applied for University Admission ( in the order preference indicated in application submitted to the University Grants Commission)

1. .............................. 2. .............................. 3. ..............................
4. .............................. 5. .............................. 6. ..............................

7. Preferred Examination centre/medium* (Please use √ symbol)

| | | | |
|---|---|---|---|
| Colombo | | Sinhala | |
| Anuradhapura | | Tamil | |
| Vavuniya | | | |
| Jaffna | | | |

8. Documents to be attached (Please indicate the documents attached with the application form by using √ symbol)

01. Cash paying-in-slip
02. Certified copy of G.C.E. (A/L) 2006 Examination results
03. Certified copy of G.C.E. (O/L) Examination results
04. Certified copy of National ID card or postal ID
05. Affidavit in support of change in names appearing in different documents / certificates, if any.

I certify that the above particulars submitted by me are true and accurate.

Date : ..........

..............................
Signature of Applicant

* The paper will be in English with translations in the language specified. Please note that ONE section will be on English comprehension.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர் ஒன்றியம் நடாத்தும் க.பொ.த (சாதாரண) தர மாணவர்களுக்கான கருத்தரங்கிற்குரிய கணிதபாட வினாத்தாள்

**நேரம்: 3.00 மணித்தியாலம்**

(நேற்றைய தொடர்ச்சி)

d)





O வை மையமாகக் கொண்ட வட்டத்திற்கு C இலிருந்து வரையப்பட்ட தொடலி CT ஆகும். TB என்பது கோணம் CTD இன் இருகூறாக்கி ஆகும். கோணம் BTC = 35° ஆகும். இவ் வட்டத்தின் ஆரை 5 cm எனவும் தரப்பட்டுள்ளது.

1. கோணம் ATB இன் பெறுமானம் யாது? காரணம் கூறுக.
2. கோணம் TAB இன் பெறுமானம் யாது?
3. $\Delta$TBD இருசமபக்க முக்கோணி என நிறுவுக.
4. கோணம் OTC இன் பெறுமானம் யாது?
5. TC = 12 cm எனின் BC இன் பெறுமானத்தைக் காண்க.
6. முக்கோணிகள் BTC, ATC என்பன சமகோண முக்கோணிகள் ஆவதற்குரிய காரணங்களைத் தருக.
7. $TC^2 = BC.AC$ எனக் காட்டுக.

e) ஒரு நலன்புரி நிலையம் ஒன்றில் இருந்த 40 குடும்பங்களில் 30 குடும்பங்கட்கு மாவும், 15 குடும்பங்கட்கு அரிசியும் வழங்கப்பட்டது. 3 குடும்பங்கட்கு இப்பொருள்களில் எதனையும் வழங்க முடியவில்லை.
1. இரு பொருட்களும் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை x எனக்கொண்டு மேற்குறித்த தரவினை வென்வரிப்படம் ஒன்றிற் குறிக்க.
2. x இல் ஒரு சமன்பாட்டை ஆக்குவதன் மூலம் இரு பொருட்களும் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கையைக் கணிக்க.
3. ஒரு வாரத்தின் பின் மா மட்டும் பெற்றுக்கொண்ட குடும்பங்கட்கு சீனி வழங்கப்பட்டது எனின் தரவை வென் உருவில் குறித்துக் காட்டுக.
4. தற்போது மா வழங்கப்படாத குடும்பங்களின் எண்ணிக்கையை காண்க.

f)




மாணவர்கள் மாதாந்தப் பரீட்சை ஒன்றிலே கணித பாடத்திற்குப் பெற்ற புள்ளிகளின் பரம்பல் தரப்பட்ட திரள் மீடிறன் வளையியில் காட்டப்பட்டுள்ளது.

1. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது ?
2. இப்பரீட்சையில் கணித பாடத்தின் உயர் புள்ளி யாதாக இருக்கலாம் ?
3. 45 சித்திப்புள்ளி எனின் சித்தியடைந்த மாணவர்களின் சதவீதத்தைக் காண்க.
4. பரீட்சைக்குத் தோற்றியவர்களின் ¼ பங்கு மாணவர்கட்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்படுமாயின் அதற்கான வெட்டுப்புள்ளியைக் காண்க.

**02)** a) ரூபா 25,000 பெறுமானம் கொண்ட வானொலிப் பெட்டி ஒன்றினை ரூபா 7000 உடன் கொடுப்பனவைச் செய்து வாடகைக் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் வாங்கமுடியும். எஞ்சிய தொகை 24% ஆண்டு வட்டியுடன் 12 மாதாந்த தவணைச் கட்டணங்களாகச் செலுத்தலாம்.
1. தவணைக் கட்டணங்களாகச் செலுத்துவதற்கு எஞ்சிய பணத்தின் தொகை யாது ?
2. ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டிய கடன் தொகை யாது ?
3. வட்டி செலுத்தப்பட வேண்டிய மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
4. செலுத்த வேண்டிய மொத்த வட்டியைக் காண்க.
5. ஒரு மாதத் தவணைக் கட்டணத்தின் பெறுமானம் யாது ?

b) இவ்வானொலிப் பெட்டிக்கான ரூ. 18000 பணத்தினை வங்கி ஒன்றில் ஆண்டுக்கு 2% கூட்டுவட்டிக்கு கடனாகப் பெற்று இவ்வானொலிப் பெட்டியை வாங்கத் தீர்மானிக்கப்பட்டது. வங்கி 6 மாதங்களுக்கு ஒரு தடவை வட்டியை மூதலுடன் சேர்க்கும் எனின், வருட முடிவில் அவன் வங்கிக்குச் செலுத்தும் வட்டியைக் காண்க.

**03)** 1. AB = 5.6 cm, கோணம் ABC = 120°, BC = 4.5 cm, AD = DC, BD = 5.2cm ஆகவுடைய நாற்பக்கல் ABCD ஐ அமைக்க அமைப்பினைத் தொடங்கு முன் நாற்பக்கல் ABCD இன் பருமட்டிப் படம் ஒன்றை வரைக.
2. மூலைவிட்டம் AC இற்கு D இனூடு சமாந்தரம் ஒன்றினை வரைக. அது நீட்டப்பட்ட BC, நீட்டப்பட்ட BA களை X, Y இல் சந்திக்கின்றது எனின் X,Y இன் இட அமைவுகளை குறிக்க.
3. நாற்பக்கல் ABCD இன் பரப்பளவானது $\Delta$ABX இன் பரப்பளவுக்குச் சமன் என நிறுவுக.
4. இங்கு நீர் பயன்படுத்திய தேற்றத்தினுள் ஒன்றை முழுமையாக எழுதுக?
5. $\Delta$ADC யினது சுற்றுவட்டத்தை அமைத்து அதன் ஆரையை அளந்து எழுதுக.

**04)** சார்பு $y = -(x-1)^2 + 3$ இன் வரைபை வரைவதற்குப் பூரணப்படுத்தப்படவேண்டிய ஓர் அட்டவணை கீழே காணப்படுகின்றது.


| x | -2 | -1 | 0 | ½ | 1 | 1½ | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| y | -6 | | 2 | | | 2¾ | | -1 | -6 |

a) i) இவ்வட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து அதிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.
ii) வழங்கப்பட்டுள்ள வரைபுதாளில் x அச்சு வழியே பத்துச் சிறிய சதுரங்களினால் ஓர் அலகும் y அச்சுவழியே பத்து சிறிய சதுரங்களினால் ஓர் அலகும் வகைகுறிக்கப்பட்டு உள்ள அளவிடையை எடுத்து மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.

b) உமது வரைபைப் பயன்படுத்தி
i) இவ்வளையியினது உயர்வுப் புள்ளியை எழுதுக.
ii) $(x-1)^2 - 3 = 0$ இன் மூலங்களைக் காண்க.
iii) சார்பு நேராக இருக்கும் x இன் பெறுமான ஆயிடையை எழுதுக.
iv) $-(x-1)^2 + 3 = 1$ ஆகும் x இன் பெறுமான வீச்சை எழுதுக.
v) இவ்வரைபானது தற்போது மேல்நோக்கி 2 அலகுகளால் உயர்த்தப்படின் புதிய வளையியினது சமன்பாட்டினை உய்த்தறிக.

c) $y = -(x-1)^2 + 3$, $y = \frac{1}{2}x + 1$ எனும் சமன்பாடுகளினைத் தீர்க்க.

**05)**




தரப்பட்ட உருவானது r ஆரையும், 2r உயரமும் உடைய உருளையிலிருந்து அதே ஆரை rஐயும் உயரம் rஐயும் கொண்ட கூம்புப்பகுதி நீக்கப்பட்டதைக் காட்டுகிறது.

a) i. உருளையின் கனவளவை π, r சார்பாக எழுதிச் சுருக்குக.
ii. கூம்பின் கனவளவை π, r சார்பாக எழுதிச் சுருக்குக.
iii. தற்போதுள்ள திண்மத்தின் கனவளவை π, r சார்பாகத் தருக.


b) இத்திண்மமானது உருக்கப்பட்டு உலோகம் வீணாகாதவாறு ஆரை aயை உடைய கோளம் ஒன்று செய்யப்பட்டது எனின், $4a^3 = \frac{5r^3}{4}$ எனக் காட்டுக

c) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி
i) r = 8.532 எனின் மேலே உள்ள கோவையில் $a^3$ இன் பெறுமானத்தைக் காண்க.
ii) இதிலிருந்து a இன் பெறுமானத்தைக் காண்க.

**06)** a. ஒரு கூட்டல்விருத்தியின் பத்தாம் உறுப்பானது இரண்டாம் உறுப்பின் நான்கு மடங்கிற்கு சமனாகும். அதன் ஏழாம் உறுப்பானது 23 ஆகும்.
i. முதலாம் உறுப்பு a எனவும், பொது வித்தியாசத்தை d எனவும் கொண்டு a, d களில் இரு சமன்பாடுகளை ஆக்கித் தீர்க்க.
ii. $S_n = \frac{n}{2}\{a+l\}$ சமன்பாட்டைப் பயன்படுத்துவதன் மூலம் இவ்விருத்தியின் முதல் ஏழு உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
iii. கூட்டுத்தொகை 185 ஆக இருப்பதற்கு இவ் விருத்தியில் கூட்டப்பட வேண்டிய உறுப்புக்களின் எண்ணிக்கையை மேற்குறித்துக் காண்க.


b) i. 2 இற்கும் 162 இற்கும் இடையே மூன்று பெருக்கல் இடைகளைக் காண்க.
ii. பெருக்கற் தொடர் ஒன்றின் இரண்டாம் உறுப்பு 6உம் நான்காம் உறுப்பு 54 உம் எனின் a, r களைக் காண்க.
iii. வினா (ii) இல் r > O ஆக உள்ள விருத்தியின் ஏழாம் உறுப்பைக் காண்க.

**07)**




a) நடுப்புள்ளித் தேற்றத்தைக் கூறுக.

b) △ ABC யில் AB, AC யின் நடு D, E ஆகும். BA || CF ஆகும்.
i. △ ADE ≡ △ CEF எனவும்
ii BDFC ஓர் இணைகரம் எனவும்
iii BC || DE, ½ BC = DE எனவும் நிறுவுக.




C) தரப்பட்ட உருவில் PQR ஓர் இருசமபக்க முக்கோணி ஆகும். இதில் PQ = PR
PQ வின் நடுப்புள்ளி M ஆகும்
MQ = RS ஆகுமாறு PR, S வரை நீட்டப்பட்டுள்ளது.
MN, QRற்கு சமாந்தரமாக வரையப்பட்டுள்ளது.
பின்வருவனவற்றை நிறுவுக.
i) PN = NR ii) MS, Zல் இருகூறிடப்படுகிறது
iii) ZR = ¼ QR

**08)** a. பண்ணை ஒன்றிலிருந்த பசுமாடுகளிலிருந்து ஒரு நாளில் பெறப்பட்ட பாலின் அளவின் மீடிறன் பரம்பல் கீழே தரப்பட்டுள்ளது.

| பாலின் அளவு (lஇல்) | 2 - 5 | 5 - 8 | 8 - 11 | 11 - 14 | 14 - 17 | 17 - 20 | 20 - 23 |
|---|---|---|---|---|---|---|---|
| குடும்பங்களின் எண்ணிக்கை | 14 | 20 | 32 | 18 | 14 | 8 | 4 |


1. ஆகார வகுப்பாயிடையாயின் நடுப்பெறுமானத்தைக் எடுகொண்ட இடையாகக் கொண்டு மாடு ஒன்றில் இருந்து ஒரு நாளில் பெறப்பட்ட பாலின் இடை அளவைக் கிட்டிய முழு எண்ணில் காண்க.
2. வினா (1) இலிருந்து 1 வாரத்தில் 500 பசுமாடுகளில் இருந்து பெறக்கூடிய பாலின் அளவைக் காண்க.

b) நலன்புரி நிலையம் ஒன்றிலிருந்த குடும்பங்கட்கு வழங்கப்பட்ட அரிசி பற்றிய விபரம் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| அரிசி (Kg) | 5 - 9 | 9 - 13 | 13 - 21 | 21 - 25 | 25 - 29 | 29 - 33 | 33 - 45 | 45 - 49 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 3 | 4 | 12 | 9 | 12 | 6 | 6 | 1 |

1. இப்பரம்பலை வகைக்குறிப்பதற்கு ஒரு வலையுரு வரையத்தை வரைக.
2. இவ்வலையுரு வரையத்தைக்கொண்டு இப்பரம்பலின் ஆகாரத்தைக் காண்க.

**09)**




a. மட்டமான கிடைவீதி AB யிலே A யில் ஓய்வில் நிற்கும் வாகனம் ஒன்றினை வீதிக்கு முன்னால் உள்ள கோபுரத்தின் உச்சி Dல் நிற்கும் ஒருவன் அந்த வாகனத்தை 45° இறக்க கோணத்தில் காண்கிறான். அவன் உடனடியாக மீண்டும் 20m நேர் கீழே உள்ள தளத்தை அடைந்து புள்ளி C இல் இருந்து மீண்டும் அதே வாகனத்தை 26°18' இறக்கக்கோணத்தில் காண்கிறான். கட்டிடத்திற்கும் அவ்வாகனத்திற்கும் இடையிலான தூரம் d எனவும் தற்போது அவன் இருக்கும் உயரத்தை h எனவும் கொண்டு,
1) மேலுள்ள தரவுகளை காட்டுவதற்கு வரிப்படம் ஒன்று வரைக.
2) h,d இல் இரு சமன்பாடுகளை ஆக்கித் தீர்க்க.


b) காணித்துண்டு ஒன்றை அளவிடுதல் தொடர்பாக வெளிக்கள ஏடு ஒன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வரிப்படம் இங்கு தரப்பட்டுள்ளது. இதில் எல்லா அளவீடுகளும் மீற்றரிலாகும்.

| | | |
|---|---|---|
| | y | |
| | 20 | |
| | 16 | 12 C |
| A10 | 8 | 12 B |
| | 0 | |
| | x | |

1. 2m ற்கு 1cm எனும் அளவிடையைப் பயன்படுத்தி உரிய கிடைப்படத்தை வரைக.
2. காணித்துண்டின் பரப்பளவை சதுர மீற்றரில் கணிக்க.

**10)** (a) ஒரு பாத்திரத்தில் ஒரே அளவான 4 கறுப்பு, 3 வெள்ளைப் பந்துகள் உள்ளன. பாத்திரத்தில் இருந்து ஒரு பந்து எழுமாற்றாக எடுக்கப்படுகின்றது. அது கறுப்பு நிறமாயின் பாத்திரத்தில் இட்டும், அது வெள்ளை நிறமாயின் பாத்திரத்தில் இடப்படாமலும் இரண்டாவது பந்து எடுக்கப்படுகிறது.
1) மேற்குறித்த இரு பெறுபேறுகளைக் காட்டும் மரவரிப்படத்தை வரைக.
2) இரண்டாவது மாத்திரம் வெள்ளைநிறப் பந்தாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
3) குறைந்தது ஒன்றிலாவது கறுப்பு பந்து இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

b) 70 மாணவர்களைக் கொண்ட வகுப்பு ஒன்றில் 42 மாணவர்கட்கு பயிற்சிப் புத்தகமும் 30 மாணவர்கட்கு பேனாவும் வழங்கப்பட்டதோடு 32 மாணவர்கட்குப் பயிற்சிப் புத்தகமும் பென்சிலும் வழங்கப்பட்டது. அத்துடன் 12 மாணவர்கட்கு பென்சில் மட்டும் வழங்கப்பட்டது. பேனைவைப் பெற்ற அனைத்து மாணவர்களும் பென்சில்களையும் பெற்றக் கொண்டனர். அத்துடன் 3 மாணவர்கட்கு இப்பொருட்களில் எதனையும் வழங்க முடியவில்லை.




i) இம்மூன்று பொருட்களையும் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை x எனக் கொண்டு தரவை வெண்ணுருவில் குறித்து x இல் ஒரு சமன்பாட்டை ஆக்குவதன் மூலம் மூன்று பொருட்களையும் பெற்ற மாணவர் எண்ணிக்கையைக் காண்க.
ii) பேனாவும் பென்சிலும் மட்டும் பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையைக் காண்க.
iii) குறைந்தது இரண்டு பொருட்களையாவது பெற்றுக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.
iv) பென்சில் அல்லது பேனா பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கையைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 12 ❀ 09 ❀ 1937

கண் நெகிழ 14 ❀ 11 ❀ 2005

**திருமதி செல்வரத்தினம் இராசையா**

திதி : 03.11.2006

அன்பாய் எமை அரவணைத்து ஆதரவாய்
வளர்த்தெடுத்த அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவு எம் நெஞ்சில் என்றும்
மறையவே மறையாது.

கைதடி வடக்கு,
கைதடி.

(54855)

கை.சுகிதர்ன்,
(UK).

## புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விழா 21.08.2006 நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டு இன்று (3.11.2006) வெள்ளிக்கிழமை 10.30 - 12மணிவரை நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வேணுகா கொமினிக்கேசன்,
K.K.S. வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(54890)

நல்வரவை நாடும்:
வரவேற்பாளர்:
சிறிதரன் தீபா தம்பதிகள்,
79, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## சேவை

55,000 அமெரிக்கா விசா லொத்தர் விண்ணப்பப்படிவம் பெற, நவம்பர் 5ஆம் திகதி (ஞாயிறு) உதயனைப் பார்க்கவும்

Penguin Book Shop, Tel:- 071 6806843
B2/F23 Bloemendhal Flats, 011 2438367
Colombo - 13.

## புவியியல்

2008

எறியங்கள்

நாளை ஆரம்பம்

பொருளியற் கல்லூரி,

யாழ். 10-11 இணுவில் 7-8

பாரதி சித்தன்கேணி 2-3

P.S.குமரன் B.A.(Hons)

## சைகைமொழி இறுவட்டு வெளியீடு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த செல்வராஜ் தினேஸ் குமாரின் சைகைமொழி இறுவட்டு வெளியீடு இன்று வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு ஹற்றன் நஷ னல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் கலந்து கொள்வார்.

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் அன்பு அஞ்சலி



கருவறையில் 02 ❀ 02 ❀ 1953

கல்லறையில் 04 ❀ 10 ❀ 2006

**அமரர் சின்னத்தம்பி செல்வசீலன் (பாலா)**

(அலோமாஸ் - உரிமையாளர், சுன்னாகம்)

*"ஜீவியத்தில் நேசித்தவர்களே என்னை மரணத்திலும் மறவாதிருங்கள்"*

அன்பின் உருவமாய் மலர்ந்தாய்! அருளின் வடிவாய் திகழ்ந்தாய்!
இனிய நினைவாய் வளர்ந்தாய்! துன்ப இருளில் மறைந்தாய்!
டடா உங்களை யாம் மறவோம்.

இராமலிங்கம் வீதி,
உடுவில், சுன்னாகம்.

(54832)

நெஞ்சம் நெகிழ்ந்துருகும்
மனைவி : சாந்தகுமாரி
பிள்ளைகள் : அலோமா, அஷான்.

## விழிப்புணர்வு பயிற்சி நெறி

வலிகாமம் வலயக் கல்விப் பாடசாலை ஆசிரியர்களுக்கான யௌவன கர்ப்பமும் குடும்பக் கட்டுப்பாடும் தொடர்பான ஒருநாள் விழிப்புணர்வுப் பயிற்சி நெறி நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பி.ப.4 மணிவரை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைறெவுள்ளது.

## தென்மராட்சி வலய அதிபர் கூட்டம்

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

## பாராட்டு விழா

சமூக சேவையாளர் செல்லையா அன்னராசாவின் 50 வருட, சமய, சமூக சேவையைக் கௌரவிக்கும் பாராட்டு விழா நாளை பி.ப.3 மணிக்கு சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 30 ❀ 05 ❀ 1917

மறைவு 04 ❀ 10 ❀ 2006

**அமரர் வேலுப்பிள்ளை பொன்னையா**

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அணைத்தீர்கள்
அன்புமழை பொழிந்தவும் ஐவரையும் பெற்றீர்
வையகத்தி இனிவாழ்ந்த பெருந்தகையே
வானுறையும் தெய்வத்தில் பெறுக நீங்கள் சாந்தி.

இன்று (03.11.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பவானி களஞ்சியம்,
இராச வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(54888)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10 ❀ 03 ❀ 1938

மறைவு 04 ❀ 10 ❀ 2006

**அமரர் கந்தையா நடராசா**

04.10.2006 அன்று காலமான எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (03.11.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில்அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

திக்கரை வீதி, களபூமி,
காரைநகர்.

(54868)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2006

1. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 17.11.2006 நண்பகல்12 மணி வரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 20.11.2006 நண்பகல் 12.30 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 21.11.2006 முற்பகல் 10 மணி
4. கேள்வித் தொகை, கேள்விப் பத்திரப் பணம் ஆகியவற்றிக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15 விதம் சேர்த்து அறவிடப்படும்.
5. கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எமக்குப் பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்தில் சேர்ப்பிப்பதன் மூலமாகவோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அந்த்ந்த உபஅலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|
| நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1.நெல்லியடி மரக்கறிச்சந்தை | 2,000,000.00 | 20, 000.00 | 1,000.00 | - |
| 2.நெல்லியடி மீன் சந்தை | 100,000.00 | 2,500.00 | 300.00 | - |
| 3.கோயிற் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 16,000.00 | 2,000.00 | 300.00 | - |
| 4.கொட்டடிச் சந்தை | 2,100.00 | 500.00 | 300.00 | - |
| 5.நெல்லியடிஆட்டிறைச்சிக்கடை இல.1 | 46,750.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 6.நெல்லியடி சந்தை கோழிக்கடை | 15,000.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 7.நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.2 | 46,750.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 8.நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை இல.1 | 266,000.00 | 5,000.00 | 300.00 | 200.00 |
| 9.நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை இல.2 | 266,000.00 | 5,000.00 | 300.00 | 200.00 |
| 10.கோயிற் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 11.கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 149,000.00 | 5,000.00 | 300.00 | 100.00 |
| 12.கொட்டடிச் சந்தையின் ஆட்டிறைச்சிக் கடை | 41,000.00 | 500.00 | 300.00 | 200.00 |
| உடுப்பிட்டி உபஅலுவலகம் | | | | |
| 13.உடுப்பிட்டிச் சந்தை | 235,000.00 | 5,000.00 | 300.00 | - |
| 14.அந்திரான் சந்தை | 16,500.00 | 500.00 | 300.00 | - |
| 15.நவிண்டில் சந்தை | 3,500.00 | 500.00 | 300.00 | - |
| 16.உடுப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 395,000.00 | 5,000.00 | 300.00 | 100.00 |
| 17.உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 5,700.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 18.அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 185,000.00 | 5,000.00 | 300.00 | 100.00 |
| 19.உடுப்பிட்டி சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 35,000.00 | 500.00 | 300.00 | - |
| கட்டைவேலி உபஅலுவலகம் | | | | |
| 20.துன்னாலை வடக்கு சந்தை | 500.00 | 500.00 | 300.00 | - |
| 21.துன்னாலை வடக்குஆட்டிறைச்சிக் கடை | 35,100.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 22.அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக்கடை | 21,000.00 | 500.00 | 300.00 | 100.00 |

திரு.சி.வே.குலநாயகம்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
01.11.2006.

C/51253)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் நாகரத்தினம்

தும்பளை, மணல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் 27/8, துரையப்பா ஒழுங்கை, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் நாகரத்தினம் நேற்று (02.11.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தும்பளை கணபதிப்பிள்ளை இரத்தினத்தின் அன்பு மனைவியும் கணேசரத்தினம்(கனடா), அரசரெத்தினம்(கனடா), வியஜரெத்தினம்(கனடா), கருணைரெத்தினம் **(UK),** மகிழ்மணி(யாழ்ப்பாணம்), ஜீவமணி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் அன்னகுலதேவி, மலர்ச்சோதி, சோதிமலர், தர்மலோஜி, பத்மநாதன்(நிர்வாக உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) மற்றும் காலஞ்சென்ற பாலசுந்தரம் ஆகியோரின் மாமியும் பிரசாந்தி, பிரகாந், ரெசா, றஜீதா, கிரிஜா, விபிஸ், ரதீஸ், கவிதா, கஜேந்தினி, கஜானா, சோதீசன், லாவண்யா, கோபிசங்கர் ஆகியோரின் பேர்த்தியும் டிலான், மிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3.11.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/51259)

தகவல்:
மகள், மருமகன்.

## மரண அறிவித்தல்

### சண்முகவடிவேலு தெய்வசிகாமணி (துரை)



நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகவடிவேலு தெய்வசிகாமணி 01.11.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகவடிவேலு இரத்தினம் தம்பதியரின் பாசமிகு புத்திரனும் சண்முகவடிவேல் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் நிமலினியின் பாசமிகு கணவரும் ஸ்ரீராம், கோபிராம், ஜெயராம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான இராஜசேகரம், தேவதாஸ் மற்றும் கமலாதேவி, பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம், கார்த்திகேசு, மகேந்திரம் - லலிதா, கல்யாணி - ரகுநாதன், தேவிகா- மோகனகிருஷ்ணா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காட்டு இந்து மயானத்தில்தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(54885)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# ஜெனிவாப் பேச்சு யாருக்கு வெற்றி?

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஜெனிவாப் பேச்சுகள் முன் நகர்வு ஏதுமின்றி - பயனேதுமின்றி - தோல்வியில் முடிவடைந்துவிட்டன என்பதே பொதுவான அபிப்பிராயம். அப்படித்தான் நடுநிலையாளர்கள் கருத்து வெளியிடுகின்றார்கள். பொது மக்களின் கருத்தும் அதுதான். சர்வதேச சமூகத்தின் புரிதலும் அதுவே.

ஆனால், பேச்சுகளில் ஈடுபட்ட இரு தரப்பினரும் பேச்சு மூலம் ஆக்கபூர்வமான பெறுபேறுகள் எட்டப்படாமையை ஒப்புக்கொண்டு அதற்கான குற்றச்சாட்டுகளை மறுதரப்பு மீது சுமத்துகின்றார்கள். அதேவேளை, தங்களைப் பொறுத்தவரை 'ஜெனிவா - 2' பேச்சுகள் தங்களுக்கு முழு வெற்றி என்று குறிப்பிடவும் அவர்கள் தவறவில்லை.

பேச்சு முடிந்து நாடு திரும்பிய அரச பேச்சுக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பேச்சுகள் அரச தரப்புக்கு வெற்றியே என்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

அதேபோல, பேச்சு முடிந்து கிளிநொச்சி திரும்பிய புலிகளின் பேச்சுக் குழுத் தலைவரும், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருமான சு.ப.தமிழ்ச்செல்வனும் பேச்சுகள் தங்களுக்கு வெற்றியே என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

"ஈழத் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பேரவலங்களை சர்வதேச அரங்கில் போய் நின்று பகிரங்கப்படுத்தினோம். அந்தப் பேரவலங்களை நமது தமிழ் மக்கள் மீது திணித்து, அவர்களைப் பெரும் கொடூரத்துக்குள் தள்ளியுள்ள இலங்கை அரசு, அந்த அவலங்களிலிருந்து மக்களை விடுவிப்பதற்கு மறுத்து, இராணுவத் தந்திரோபாய நெருக்குவாரங்களை அவர்கள் மீது இன்னும் மோசமாகத் திணிப்பதற்குக் கங்கணம் கட்டி முனைப்புடன் செயற்படுகின்றது என்பதை ஜெனிவாப் பேச்சு மேசையைப் பயன்படுத்தி சர்வதேச சமூகத்தின் முன்னால் அம்பலப்படுத்தி, நிரூபித்திருக்கின்றோம். அந்த வகையில் இந்தப் பேச்சுகள் எமக்கு முழு வெற்றியே!" - என்று குறிப்பிட்டிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

அக்கருத்து முற்றிலும் சரியானதுதான்.

அமைதி முயற்சிகள் விடயத்தில், இலங்கை அரசு ஒரு தரப்பாக இருந்தாலும், ஒரு நாடு என்ற அந்தஸ்துக் காரணமாக - தகுதி நிலை காரணமாக - இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளேயே இருந்து வருகிறது. அதே சமயம், நாடு அல்லாத தரப்பு (Non State Factor) என்ற முறையில் புலிகள் அமைப்பு மீதான அழுத்தம் அதிகம் இருந்து வருவதையும் நாம் உணர முடிகின்றது.

ஆனால், ஜெனிவாவில் நடந்து, தோல்வியில் முடிந்த தற்போதைய பேச்சுக்களை உற்றுநோக்கி அவதானித்துள்ள சர்வதேச சமூகம், இனிமேல் தரப்புகள் மீது அழுத்தம் பிரயோகிக்கும் தனது சமன்பாட்டை மாற்றிக் கொள்ளும். அரசுத் தரப்பு மீதான சர்வதேச நெருக்குவாரம் கூடும் என்று புலிகள் எதிர்பார்க்கின்றார்கள். கிளிநொச்சி திரும்பியதும் தமிழ்ச்செல்வன் அளித்த செவ்வி, புலிகளின் இந்த எதிர்பார்ப்பை - நம்பிக்கையை - வெளிப்படுத்தி நிற்கின்றது.

'ஜெனிவா-2' பேச்சு மேசையில் நடந்தவற்றை ஆராய்பவர்கள் புலிகளின் இந்த எதிர்பார்ப்பை அர்த்தமுள்ளது - நியாயமானது - என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

'ஜெனிவா - 1' பேச்சுகளின் பின்னர் களத்தில் தங்கள் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் மனிதாபிமான நெருக்கடிகளையும், வாழ்வியல் சிக்கல்களையும், அவலங்களையும் வெளிப்படுத்துவதிலும், அவற்றுக்குத் தீர்வு காண முயற்சிப்பதிலும், தற்போதைய 'ஜெனிவா-2' பேச்சுகளில் புலிகள் முனைப்பாக - விடாப்பிடியாக - உறுதியாக நின்றார்கள்.

மனிதப் பேரவலங்களை உடன் விரைந்து தீர்ப்பது குறித்துப் பேசுங்கள் என்று சர்வதேச சமூகம் முன்னரே - பேச்சுக்கு முன்பே - அறிவித்திருந்த நிலையில், இவ்விவகாரத்தில் பேச்சு மேசையில் புலிகளின் விடாப்பிடி நிலை சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டுக்கு மாறானதாக அமைந்திருக்கவில்லை.

அதேபோன்று, யுத்த நிறுத்த உடன்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயுங்கள் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்திய பின்னணியில், யுத்த நிறுத்த உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஏ-9' பாதைத் திறப்பை செயற்படுத்துங்கள் என்ற புலிகளின் உறுதிப்பாடும் சர்வதேச சமூகத்தின் கருத்தியலை ஒட்டியதுதான். அடியொற்றிச் செல்வதுதான்.

அது மட்டுமல்லாமல், யுத்த நிறுத்தத்தை நூறு வீதம் நடைமுறைப்படுத்தல், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாட்டை உறுதிப்படுத்தல் போன்றவை தொடர்பாக புலிகள் வலியுறுத்தி நின்ற நிலைப்பாடு, சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பை முற்றும் முழுதாகத் திருப்தி செய்யும் அம்சம்தான்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை விடயங்கள், பன்மைத்துவம், ஜனநாயகத்தை நிலைநிறுத்துதல் போன்ற தலைப்புகளில் பேச அரசுத் தரப்பு விரும்பியபோது அது பற்றியெல்லாம் நாமும் பேசத் தயார் என்று புலிகள் பேச்சு மேசையில் விடுத்த எதிர்பாராத அறிவிப்பு அரசுத் தரப்பை அதிர்ச்சியில் மூழ்கடித்த அதேசமயம், சர்வதேச சமூகத்தை முழுத் திருப்திக்குள்ளும் ஆழ்த்தியிருக்கும் என்பது நிச்சயம்.

அடிப்படை விடயங்கள் (Core Issues) குறித்தும் பேச முற்பட்டால் புலிகள் பின்வாங்கி விடுவார்கள் என எதிர்பார்த்து, அந்த விடயம் குறித்துப் பேசுவதற்கு முன் ஆயத்தமின்றி வந்த அரசுத் தரப்புக்கு -

"அடிப்படை விடயங்கள் பற்றிப் பேசுவதா? நாம் அதற்கும் தயார். சரி, அடிப்படை விடயங்களுக்கான உங்கள் தீர்வாக என்ன யோசனை வைத்திருக்கிறீர்கள்? அதை முன்வையுங்கள். பேசுவோம்." - என்று புலிகள் கொடுத்த அதிர்ச்சி வைத்தியம் எதிர்பாராத ஒன்று.

"அடுத்து வரும் பேச்சுகளில் அதை முன்வைக்கிறோம். இப்போதுதான் தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் இடையே உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. ஆகவே, கொஞ்சம் பொறுங்கள்." - என்று கூறிச் சமாளிக்க வேண்டிய இக்கட்டு அரசுத் தரப்புக்கு நேர்ந்தது.

இதே போலவே ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது பற்றிய அரசுத் தரப்பின் உபதேசத்துக்குப் புலிகளின் பதிலடி அமைந்தது.

"ஜனநாயக வழியில் முழு அளவில் செயற்படத் தமிழர் தரப்புத் தயார். ஆறாவது அரசமைப்புத் திருத்தம் மூலம் தமிழர்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை ஜனநாயக முறையிலேயே பறித்தவர்கள் சிங்கள அரசாகிய நீங்கள்தான். அந்தத் திருத்தத்தை அகற்றி, தமிழரின் ஜனநாயக உரிமையை ஜனநாயக வழியில் திரும்பி வழங்க நீங்கள் இடமளிப்பீர்களானால் தமிழர்களும் முழு அளவில் ஜனநாயகத்தின் வழிக்குத் திரும்ப முடியும். ஜனநாயகத்தின் பெயரால் பெரும்பான்மை இனமான சிங்களம், சிறுபான்மையினமான தமிழனத்தை அடக்கி, ஒடுக்கி, அழிக்கும் ஜனநாயக விரோதப் போக்கை நிறுத்துவதற்கு முதலில் வழிபாருங்கள்" - என்று வாதத்தை முன்வைத்து அரச தரப்பை வாயடக்க வைத்தது புலிகள் தரப்பு.

இந்த விடயங்களை எடுத்துப் பார்க்கும்போது 'ஜெனிவா - 2' பேச்சு மேசை புலிகளுக்கு வெற்றி என்று தமிழ்ச்செல்வன் கூறுவது நியாயமுள்ளதாகவே - அர்த்தமுள்ளதாகவே - படுகிறது.

# பங்கீட்டு அட்டைக்கு இன்று தொடக்கம் பெற்றோல் விநியோகிப்பதற்கு ஏற்பாடு

## போதியளவு வழங்கப்பட்டுள்ளதால் அவசரம் தேவை இல்லை என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.3

குடாநாட்டில் பங்கீட்டு அட்டைக்கு இன்றுமுதல் பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இரண்டாம் கட்டத்தில் பெற்றோல் பெறாத பொதுமக்களுக்கு 300 ரூபாவுக்கு அதாவது 2.927 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்படும் என்றும்-

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு நாளை சனிக்கிழமை 300 ரூபாவுக்கு அதாவது 2.927 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்படும் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

பங்கீட்டு அட்டைகள் வைத்திருக்கும் அனைவருக்கும் விநியோகம் மேற்கொள்ளக் கூடிய அளவு பெற்றோல் எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும்-

எனவே பொதுமக்கள் அவசரப்படாது சென்று பெற்றோலைப் பெற முடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பெற்றோல் விநியோகம் செய்யப்படும் நிலையங்களின் விவரம் வருமாறு:-

நாகலிங்கமும் மைந்தர்களும்-சுன்னாகம், திருமதி கனகராசன்-சுன்னாகம், செ.உதயகுமார்-சண்டிலிப்பாய், மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம், சங்கானை ப.நோ. கூ. சங்கம், யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம், திரு.எஸ்.சரவணபவன், நல்லூர் ப.நோ.கூ.சங்கம், கே.தேவகுருநாதன்-கல்வியங்காடு, குகன் ஸ்ரோர்ஸ் - திருநெல்வேலி, திரு.திருமதி ஜெயதேவா -திருநெல்வேலி, திருமதி.யே.நடராசா- உரும்பிராய், நீர்வேலி ப.நோ. கூ.சங்கம், அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம், புலோலி ப.நோ.கூ.சங்கம், நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கே.எஸ்.பொன்னம்பலம்-கைதடி, சாவகச்சேரி ப.நோ. கூ.சங்கம், வேலணை ப.நோ.கூ.சங்கம், மாக்பெட்-யாழ்ப்பாணம். (1-17)

# 583 தபால் பொதிகள் யாழ்.வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,நவ.3

வெளிமாவட்டங்களில் இருந்த 583 தபால் பொதிகள் குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டுள்ளன என்று வட பிராந்திய தபால் மா அதிபர் எஸ்.குமரகுரு தெரிவித்துள்ளார்.

இதேவேளை- நேற்றுமுன்தினம் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட கப்பலில் இங்கிருந்து 72 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் - அவர் தெரிவித்தார்.

இதேவேளை- ஏற்கனவே எடுத்துவரப்பட்ட 673 பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு அவற்றில் இருந்த தபால்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்ட அனேகமான பார்சல்கள் நனைந்து உடைந்த நிலையில் காணப்பட்டன.

உரியவர்கள், பார்சல்களை வந்து பெற்றுக்கொள்ளுமாறு அவர்களது முகவரிக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளோம்.

இருந்த போதும் இன்னும் 150 இற்கும் மேற்பட்ட பார்சல்கள் பொறுப்பேற்கப்படாத நிலையில் உள்ளன.

எனவே, உரியவர்கள் அவற்றை விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று - வட பிராந்திய தபால் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (203-111)

# சாவகச்சேரி நீதிமன்றில் வைத்து இரண்டு ஆண் குழந்தைகள் தத்துக் கொடுக்கப்பட்டன

தென்மராட்சி,நவ.3

சாவகச்சேரி நீதிமன்றின் பொறுப்பில் இருந்த இரண்டு ஆண் குழந்தைகள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் வைத்து சட்ட பூர்வமாக தத்துக் கொடுக்கப்பட்டன.

சாவகச்சேரி நீதிமன்றின் சாவா. இல.4, சாவா. இல.5 ஆகிய குழந்தைகளே நேற்று தத்துக் கொடுக்கப்பட்டன.

கடந்த மாதம் 14ஆம் திகதி நீதிமன்றில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட இரு தம்பதிகளிடம் இக் குழந்தைகள் தத்துக் கொடுக்கப்பட்டன.

சிறுவர் பாதுகாப்பு அலுவலர் சி.த.சிவரகன், நீதிமன்ற பதில் பதிவாளர் வே.கணேசமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் குழந்தைகள் தத்துக்கொடுக்கப்பட்டன.

## படகுகளில் வெள்ளைக்கொடிகளைப் பறக்கவிட்டவாறு

# மேலும் ஒரு தொகுதி கடற்றொழிலாளர் நேற்றும் குருநகர் வந்தடைந்தனர்

வன்னியில் சிக்குண்டிருந்த கடற்றொழிலாளர்களில் மேலும் ஒரு தொகுதியினர் நேற்றும் குடாக்கடலூடாக தமது கடற்கலங்களில் குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

குருநகரைச் சேர்ந்த 22 பேரும், மண்டைதீவைச் சேர்ந்த 13 பேருமாக மொத்தம் 35 கடற்றொழிலாளர்கள் தமது 10 படகுகளில் பாலாவி மற்றும் நாச்சிக்குடாப் பகுதியில் இருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் குருநகர் இறங்குதுறைப் பகுதியை வந்தடைந்தனர்.

குறிப்பிட்ட கடற்றொழிலாளர்களது கடற்கலங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இவர்கள் அனைவரும் தமது படகுகளில் பாய்களின் உதவியுடன் வருகை தந்தனர் என்றும் -

படகுகளின் வெளியிணைப்பு இயந்திரங்களை இயக்கவில்லை எனவும் - தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட படகுகளின் வருகையை தூரத்தில் அவதானித்த படையினர், இவர்களது படகுகளை நோக்கி வழமைபோல எறிகணை வீச்சுகளையும் துப்பாக்கி வேட்டுக்களையும் சரமாரியாக நடத்தினர். எனினும் எதுவித பாதிப்புமின்றி இவர்களனைவரும் கரையை அடைந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் வன்னிப் பகுதியில் தாம் விலை கொடுத்து வாங்கிய உலர் உணவுப் பொருள்கள் மற்றும் தேங்காய்களையும் எடுத்து வந்திருந்தனர். இவர்கள் அனைவரையும் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.பிறேமன் குருநகர் இறங்குதுறைக்குச் சென்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

எனினும், இவர்கள் அனைவரையும் குருநகர் இறங்குதுறைப் படையினர், விசாரணை செய்து கட்டம் கட்டமாக நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் தமது உறவினர்களுடன் சேர அனுமதித்தனர் என குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்தது.

கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரசு - புலிகள் மோதலைத் தொடர்ந்து குடாக் கடலில் தொழில் செய்து கரைக்கு வராமல் இருந்து வன்னியில் தங்கியிருந்த இக் கடற்றொழிலாளர்களில் 46 கடற்றொழிலாளர்கள் கடந்த 31ஆம் திகதியும்

21 கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினமும் தமது கடற்கலங்கள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களுடன் குடாக் கடலூடாக குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தமை அறிந்ததே.

இவ்வாறு கடற்றொழிலுக்குச் சென்ற கடற்றொழிளாலர்களில் மேலும் சுமார் 52 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்களின் வருகையைத் தாம் நாளாந்தம் எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்ட கடற்றொழிலாளர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (51)

# தம்பசிட்டியில் யுவதி சுட்டுக்கொலை

வடமராட்சி தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயிலுக்குச் சமீபமாக நேற்று யுவதி ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மின்சார நிலைய வீதி, ஓடக்கரை பருத்தித்துறை என்ற முகவரியைச் சேர்ந்த செல்வி நாராயணமூர்த்தி யசோதினி (வயது 22) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் சுகாதாரத் தொண்டராகக் கடமையாற்றியவர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (118)

## புத்தூர்ச் சந்தி, நுணாவிலிலுள்ள

# படையினரின் வர்த்தக நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு உணவுப் பொருள்

தென்மராட்சி,நவ.3

மீசாலை புத்தூர் சந்தி, நுணாவில் மத்தி ஆகிய இடங்களில் உள்ள படையினரின் வர்த்தக நிலையங்களில் உலர் உணவுப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

தினமும் பெருமளவு மக்கள் வரிசையில் நின்று பொருள்கள் கொள்வனவு செய்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தினமும் பி.ப. 4 மணிக்குப் பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு பொருள்கள் வழங்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அரிசி, மா, சினி, பருப்பு, பால்மா, தீப்பெட்டி ஆகிய உலர்உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

**நாளை**
ஐப்பசி 18
சனிக்கிழமை
04.11.2006
திதி : சதுர்த்தசி
முன்னிரவு : 09.14
நட்சத்திரம் : ரேவதி
முற்பகல் : 11.20
சுபநேரம் : 03.04 - 0434
ராகுகாலம் : 09.04 - 10.34

# தபால் அடையாள அட்டை பெற தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.3

மாணவர்களுக்கு தபால் அறிமுக அடையாள அட்டை பெறவிரும்பும் பாடசாலை அதிபர்களை பிரதம தபாலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வட பிராந்திய பிரதித் தபால் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார்.

ஜீ.சி.ஈ (சாதாரண) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான அடையாள அட்டைகளை விரைவாக வழங்க [illegible]கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் நடமாடும் சேவைகளை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும் - அவர் தெரிவித்தார். பாடசாலைகளில் நடமாடும் சேவையை நடத்த விரும்பும் பாடசாலை அதிபர்கள் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சுப்பிரமணியம் - தொலைபேசி இல. 222 7207 அல்லது சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் எஸ்.சுந்தரலிங்கம் - தொலைபேசி இல. 222 2205 ஆகியோருடன் தொடர்புகொண்டு ஏற்பாடு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தினங்களில் ஆறு பேர் கடத்தப்பட்டதாக மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ.3

குடாநாட்டில் கடந்த இரு தினங்களில் 6 பேர் கடத்தப்பட்டுள்ளனர் என்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பிறவுண் வீதியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் தர்மேந்திரா (வயது-25) என்பவர் நேற்றுக் காலை 5 மணிஅளவில் வீட்டுக்குள் புகுந்த சீருடையினரால் கடத்திச்செல்லப்பட்டார் என்றும்-

நேற்று முன்தினம் இணுவில் லக்மி தியேட்டருக்கு முன்பாக வைத்து திருஞானசம்மந்தர் ரமணன் (வயது-23) என்பவர் சீருடையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்றும் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும்-

இதே வேளை கடந்த புதனிரவு சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த நடராஜா நர்மதன் (வயது-20) வீட்டுக்குள் நுழைந்த சீருடையினரால் அழைத்துச் செல்லப்பட்டார் என்றும்-

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவானந்தம் சிறீதரன் (வயது-30) என்பவர் புதன்கிழமை இரவு 10 மணிஅளவில் வீட்டுக்குள் நுழைந்த சீருடையினரால் கடத்திச் செல்லப்பட்டார் என்றும்-

இணுவில் மேற்கைச் சேர்ந்த ஒட்டோச் சாரதியான பாஸ்கரன் பிரதாப் என்பவர் புதனிரவும் ஆயுததாரிகளால் கடத்திச்செல்லப்பட்டார் என்று அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில்-

இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த ஜீவன் ஜெகன்நாத் (வயது-18) என்பவர் தொண்டைமானாற்றில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற முக்கிய நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றவர் என்றும்- இதுவரை வீடு திம்பவில்லை என்று மனிதஉரிமை ஆணைக்குழுவின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 650 பயணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொமாண்டர் தஸநாயக்க தெரிவித்தார். யாழ். குடாநாட்டில் இருந்து வெளி யேற முடியாத நிலையில் இருந்த 650 பயணிகள் இந்தக்கப்பல்மூலம்திருகோணமலையை வந்தடைந்தனர்என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## ஏ-9 வீதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தும் குடாநாட்டு மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை அரசு தொடர்ந்து கப்பல் மூலம் அனுப்பி வருகிறது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, நேற்றைய தினம் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கடந்த 48 மணி நேரத்துக்குள் முகமாலை முன்னரங்க இராணுவ நிலைகள் மீது மூன்று முறை ஆட்டிலறி மற்றும் மோட்டார் தாக்குதல் களை மேற்கொண்டுள்ளனர். இந்நிலை யில் ஏ-9 வீதியை எவ்வாறு திறக்க முடியும்-என்றார் அமைச்சர் யாப்பா. (அ-ஐ)

## குடாநாட்டு மக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களிடம், தொலைபேசி மூலம், ஏ-9 வீதி திறக்கப்பட்டதாகக் கூறப்படுவது உண்மையா என்று கேட்டார்கள்.

தாங்கள் கேள்வியுற்றது உண்மையாக இருந்துவிடக்கூடாதா என்ற ஆதங்கத்துடனும் ஆவலுடனும், பலரும் ஓரிடத்தில் என்று மில்லாமல் பல இடங்களிலும் விசாரித்தார்கள். உண்மையா என்று அறிய அவசரப்பட்டார்கள்.

முற்பகல் 10 மணியளவில் மூண்ட இந்த வதந்தி காட்டுத் தீ போல குடாநாடெங்கும் பரவியது. காட்டுத் தீ எந்தளவு வேகமாகப் பரவும் என்று உய்த்துணரும் அளவுக்கு ஏ-9 பாதை விவகாரம் குடாநாடெங்கும் பற்றிப் பரவியது.

உதயன் அலுவலகத் தொலைபேசிகள் நிமிடத்துக்கு நிமிடம் ஒலித்தன. ஏ-9 திறந்தாச்சாம், என்ற வதந்தியால் எழுந்த தமது சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக எண்ணற்ற வாசக நேயர்கள் ஆசிரியபீடத்தினரைக் களைக்கச் செய்துவிட்டனர். மாலை 5 மணிவரை வாசகர்களின் [illegible] பேசி அழைப்புகள் குறைந்ததாக இ[illegible].

குடாநாட்டில் மட்டுமென்ன, கொழும்பு வரை பரவிய அந்த வதந்தியால் அங்கிருந்தும் தொலைபேசிகள் உதயன் ஆசிரிய பீடத்தைத் குடைந்தன.

ஏ-9 பாதை திறக்கப்படமாட்டாதா என்ற குடாநாட்டு மக்களின் ஏக்கத்தையும், எதிர்பார்ப்பையும் வைத்து உண்டாக்கப்பட்ட வதந்தி வேகமாகப் பரவியதில் ஆச்சரியமில்லை என்கின்றனர் பலர்.

மக்களின் இந்த ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் சம்பந்தப்பட்டவர்கள் உணரப்போவது எப்போது? (அ)

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் மேலும் இரு இராணுவத்தினர் காயமுற்றனர் என தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையம் நேற்று தெரிவித்தது.

## புலிகளின் பயிற்சி முகாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த இடத்துக்கு விடுதலைப் புலிகள் செல்கின்றனர் என்று தகவல் கிடைத்ததை அடுத்தே தாக்குதல் நடத்தப்பட்டது. அதுமருத்துவமனையிலிருந்து மிகவும் தொலைவில் உள்ள ஒரு பகுதிதான்.

கேள்வி:- இந்தத் தாக்குதலினால் மருத்துவமனைக்கு சேதம் ஏற்பட்டதாகவும், அங்கிருந்த நோயாளர்கள் பயத்தினால் வெளியேறினார்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமிழோசையிடம் தெரிவித்தாரே...?

பதில்:- அங்கு என்ன நடந்தது என்று எனக்கு துல்லியமாகத் தெரியாது. விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் மீதே தாக்குதல் நடத்தினார்கள் என விமானப் படையினர் கூறுகின்றார்கள். பிற விடுதலைப் புலிகளும் அங்கு பயிற்சி பெற வந்தனர் என்றும் விமானப்படையினர் கூறுகின்றார்கள். அந்த இடம் கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து இரண்டரை - மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இருந்ததாகவும் விமானப்படையினர் தெரிவித்தனர்.

கேள்வி:- மருத்துவமனைக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதை இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்கள் மூலம் பார்க்க முடிகிறதே. பாதிப்பு இல்லை என்று எப்படி நீங்கள் கூறுகிறீர்கள்?

பதில்:- இது குறித்து என்னால் கருத்துக் கூற முடியாது. எந்த அளவுக்கு சேதம் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. சரியான இடத்தில்தான் தாக்குதல் நடத்தியதாக விமானப்படை கூறுகின்றது.

கேள்வி:- இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் சிவிலியன்கள் என்று அங்கிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளாரே?

பதில்:- போர்நிறுத்த கண்காணிப்புக் குழு உள்ளது. அதுபோன்று ஏதேனும் நடந்திருந்தால் அவர்கள் இது குறித்து விசாரிக்கலாம். விமானப்படையின் நூறு வீதம் புலிகளின் இலக்குகள் மீதுதான் தாக்குதல் நடத்தினார்கள் என்று என்னால் கூறமுடியும்- என்றார்பிரிகேடியர் சமரசிங்க.

இதேவேளை, இந்த விமானத் தாக்குதல் தொடர்பாக பி.பி.ஸிக்குக் கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக்குழு அதிகாரி ஒருவர், குறித்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் சிவிலியன்கள் போல தெரிகிறது என்றும் - அந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் எவையும் இருக்கவில்லை என்றும் - சம்பவ இடத்துக்குச் சென்ற தமது உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் எனக் கூறினார்.

இந்தத் தாக்குதல் கிளிநொச்சி மருத்துவமனைக்குச் சமீபமாகவே நடத்தப்பட்டது என்பதையும், தாக்குதலினால் மருத்துவமனையின் ஒரு பகுதி சேதமடைந்தது என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார். (க)

## மீண்டும் அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் கணவன், மனைவி, இரு குழந்தைகள் மற்றும் ஒரு முதியவர் உள்ளிட்ட 5பேர் கொல்லப்பட்டுள்ளனர். மருத்துவமனையிலிருந்து 500 மீற்றர் தொலைவிலும் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இதில் மருத்துவமனையின் ஜன்னல்கள் நொருங்கின. நோயாளிகள் அச்சத்தினால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர் - என்றார் அவர்.

## விடுதலைப்புலிகள் மீதான தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய சமாதான சபையின் உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சபையின் உறுப்பினர்கள் பின்வரும் முடிவுகளை அறிவித்தனர்.

இலங்கையில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து நடத்திய பேச்சுகளின் போது இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் தலையீடு அவசியம் என்று பலரும் வலியுறுத்தினர். எனவே இராணுவ ரீதியில் அல்லாமல் அரசியல் ரீதியாக இந்திய அரசு இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடவேண்டும்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமத்துவமான அழுத்தங்களை கொடுத்து பேச்சுக்களை முன்னெடுக்க வசதியாக விடுதலைப்புலிகளுக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை அரசியல் ரீதியாக நீக்கவேண்டுமென நாம் வேண்டுகோள்விடுக்கின்றோம். இது தொடர்பான கோரிக்கைக்கு வலுச்சேர்க்கவும் நாம் தயாராக உள்ளோம்.

இந்தியாவுக்குத் திரும்பியதும் இது குறித்து ஓரிரு தினங்களில் இந்திய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் எண்ணில் அடங்காதவையாக அதிகரித்துள்ளன. தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்கின்றது. ஜனநாயகத்திற்கு விரோதமான ஆள் கடத்தல்கள் கப்பம் பெறுதல் என்பன அதிகரித்துள்ளன - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு இந்தியா உதவவேண்டும் என்று நோர்வே தரப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

## குடாநாட்டுக்கு ஐ.நா. கொடியுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. பஞ்சமும், பட்டினியும் தலைதூக்கியிருக்கிறது.

இந்நிலையில், குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையைத் திறக்க மறுத்து வரும் அரசு, கடல்மார்க்கமாகப் பொருட்களை அனுப்புவதற்கு முழு முயற்சி எடுத்து வருகின்றது. இதன் ஒரு நடவடிக்கையாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

யாழ். குடாநாட்டுக்கு பொருட்களை அனுப்புவதற்கு ஐ.நா.சபை உதவவேண்டும் என்று அக்கடிதத்தில் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தக் கடிதத்துக்கு ஐ.நாவிடமிருந்து சாதகமான பதில் கிடைத்திருப்பதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று 'உதயன்'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதவாது:-

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இன்மையால் யாழ். குடாநாட்டு மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். கொழும்பிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு அத்தியாசிய உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும்போது கப்பல்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடி பறக்கவிட்டிருப்பதுடன் செஞ்சிலுவைச்சங்கம் வழித்துணையும் வழங்கிவந்தது. இப்போது செஞ்சிலுவைக் குழு வழித்துணை வழங்க முடியாதெனமறுப்புத் தெரிவித்து விட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருட்களை கப்பல் மூலம் எடுத்துச்செல்ல உதவும்படி கேட்டு அவரச கடிதமொன்றினை அனுப்பி வைத்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான சேவைகளுக்கான செயலளார் நாயகம் யான் எக்கலன்ட் இதற்குச் சாதகமாகப் பதிலளித்திருக்கிறார் - என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இனிமேல் யாழ். செல்லும் கப்பல்கள் ஐ.நா. சபையின் கொடிகளுடன் செல்லுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கே செல்லும் உணவுக் கப்பல்களில் ஐ.நாவின் கொடியைப் பறக்க விடுவதற்கு அனுமதி கிடைத்திருப்பதாக அரசு ஒருதலைப்பட்சமாகக் கூறியிருப்பது தொடர்பில் ஐ.நா. நிறுவனங்களிடமிருந்து இதுவரை உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் விடுக்கப்படவில்லை.

மோதலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இரண்டு தரப்புகளும் சம்மதம் தெரிவித்தால் மாத்திரமே உணவுக் கப்பல்களுக்கு வழித்துணை வழங்கப்படும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்திருக்கிறது.

உணவுக் கப்பல்களில் ஐ.நா. கொடி பறக்கவிடப்படுவது விடயத்தில் விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்தும் உடனடியாகக் கருத்து எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. (ஐ-2)

## கிளிநொச்சி மருத்துவமனைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகே குண்டுகள் வீழ்ந்து வெடித்த அதிர்ச்சியினால் மருத்துவமனையின் யன்னல் கண்ணாடிகள் நொருங்கின. மின் விசிறிகள் கழன்று வீழ்ந்தன. கூரைகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது.

உடனடியாக மருத்துவர்கள் நோயாளிகளைப் பாதுகாப்பானபகுதிகளுக்கு இடம் மாற்றினர்.

நோயாளிகளில் பலர் அச்சத்தினால் மருத்துவ மனையினை விட்டு வெளியேறி விட்டதாக பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. அருகே கிளிநொச்சி மத்திய கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் இருந்த மாணவர்கள் குண்டுத்தாக்குதலினால் அதிர்ச்சியடைந்து காணப்பட்டனர்.

குண்டு வீச்சுக்கு இலக்கான வீடு தரைமட்டமாகிக் காணப்பட்டது. சடலங்கள் தூக்கி வீசப்பட்டும், கட்டட இடிபாடுகளினுள்ளும் கிடந்தன.

தாய், தந்தை, மற்றும் இரு புதல்வர்கள், வயோதிபமாது ஆகிய ஐவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

உயிரிழந்த மாணவர்களில் ஒருவர் தரம் 8 இலும், அடுத்தவர் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்திலும் கல்வி பயில்பவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் ஓய்ந்த பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், பொது மருத்துவமனைப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

இந்தத் தாக்குதல் 'ஓர் அரச பயங்கரவாதச் செயல்' என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன், கிளிநொச்சியிலிருந்து தொலைபேசி மூலம் 'றொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் இருந்து சுமார் இரண்டரை கிலோமீற்றர் தொலைவில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் அமைந்துள்ளது.

தாக்குதல் நடந்த பகுதி தங்களது அலுவலகங்கள் அமைந்துள்ள இடத்திலிருந்து இரண்டரைக் கிலோமீற்றர்கள் தொலைவில் இருப்பதை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் உறுதிசெய்திருக்கிறது.

குண்டு வீச்சில் காயமடைந்த நால்வரின் சடலங்கள் இடிபாடுகளுக்குள் இருந்த மீட்கப்பட்டன. மற்றவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளை மரணமானார். இவர்கள் திருவையாறு பகுதியைச் சேர்ந்தவர்கள்.

உயிரிழந்தோரின் பெயர்விபரம் வருமாறு:-

முருகேசு மார்க்கண்டு (வயது 62), முருகேசு சண்முகரத்தினம் (வயது 52), சண்முகரத்தினம் சசி (வயது 18), சண்முகரத்தினம் கிரிசாந் (வயது 15), இரத்தினம் சரஸ்வதி (வயது 62)

இதேவேளை - வன்னியில், பூநகரிப் பகுதி மீதும் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் கிபிர் விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தின.

அங்கு பெரிய சேதங்கள் ஏற்பட வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-ஐ)


பௌதிகவியல்
PAPER CLASS
By: K.SELVAN
ஆரம்பம்:
08.11.2006 வெள்ளி 3p.m.
யூனிவேர்சல்

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி யாழ்.நகர்.
A/L 2008 கணக்கீடு தொங்கல் கணக்கு
SAT/SUN - 2.00-3.30 p.m.
A/L 2007 DAY கம்பனி SAT/SUN 3.30-5.00 p.m.
By: M.சசிரூபன்
ஆரம்பம்:- 04.11.2006 SAT

கணக்கீடு
A/L 2007, A/L 2008
புதிய பிரிவுகள்
By: S.தவா
ஆரம்பம்:
04.11.2006 ரவி பி.ப. 4 மணி
யூனிவேர்சல்

விசேட சிங்கள மொழி வகுப்புகள்
ஆரம்பம்:
04.11.2006
காலை 10 மணி
திகழ் கல்வி நிறுவனம்

கணக்கீடு
பாலகஜன்
A/L 2008, 2007 / DAY
SAY / SUN - 4 - 5p.m.
PAPER CLASS
BRAIN POWER INSTITUTE

CHEMISTRY DAY CLASS
By:அன்பழகன் B.Sc
1. INORGANIC Paper Mon- Fri 10.30 - 11.30
2. ORGANIC Mon- Fri 11.30 - 12.30
3. INORGANIC Thurs, Wed 11.30 - 12.30
4. SEMINARC Tue 10.30
5. அயன் சமனிலை Sat, Sun 10.30 - 12.00
யாவும் ஒரேயொரு கட்டணத்தில்
NEW SCIENCE CENTRE யாழ். நகர்.

CHEMISTRY DAY CLASS
By: RANJAN
* கடந்த கால வினாவிடை.
* சுருக்க குறிப்புகள் வழங்கப்படும்.
*மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனம்.
ஐடியல் அக்கடமி 67/5, நீராவியடி, யாழ்ப்பாணம். ஆரம்பம்: 04.11.2006 (மு.ப 8)
ஸ்கந்தா கல்வி நிலையம் மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை. ஆரம்பம்: 03.11.2006 (பி.ப 1)
★ A/L 2007, 2008 வகுப்புகளும் நடைபெறுகின்றன.
★ நேர அட்டவணை அலுவலகத்தில்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org